[illegible]

[illegible] வே. சாமிநாதையர் நூல் நி[illegible]

[illegible]

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவெங்கைக்கோவை.

நலலாறறூர் அல்லது துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்தது.

இஃது

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞானபாலையதேசிகராதீனத்துச்

சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டு

சாயாறு-ஞானசுந்தரஐயராலும்

காணியம்பாக்கம்

முருகேசமுதலியாராலும்

சென்னை

இந்துதியலாஜிகல்யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

விரோதிவருஷம்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

எவைக்கடக்கும்விழியாரைவென்றவியலுடையான
கவைப்பொருவுஞ்சிவப்பிரகாசக்கடவுளென்போன்
மவைப்பலமுறையானுணர்ந்தோர்கள்படித்துணரக
வவைத்தமிழ்நந்திருவெங்கைவாணர்க்குக்கூறினனே.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவெங்கைக்கோவை.

காப்பு.

கட்டளைக்கலித்துறை.

பூவைமலர்நிறத்தெம்பெருமாட்டிபொருப்பனையன்
பாவைவளர்க்குங்கிளிமுன்கையாளொருபான்மருவுந்
தேவைவளர்சடைத்தென்வெங்கைவாணனைச்சேர்ந்துவருங்,
கோவைபடர்வதற்குள்ளுன்றுவாமொற்றைக்கொம்பரையே.

களவியல்.

கைக்கிளை.

காட்சி.

பூவும்பழுத்தசெழுந்தீங்கனியும்பொழியமுத
மேவுங்குடங்களிரண்டெனேயிருமீனுங்கொண்டு
சேவுந்தழகர்திருவெங்கைவாணர்சிலம்பின்மலர்
தூவும்பொழிலிலெதிர்ப்பட்டதாலொருதூமணியே. (க)

ஐயம்.

மண்ணேவிரைச்சந்தனவரையோமலர்மாளிகையோ
விண்ணேவலைத்தண்புனலோபழமலைவெங்கையன்ன
பெண்ணேடிருக்கும்பொழுதிளஞ்சேலிற்பிறழுநெடுங்
கண்ணேடிருக்குமுகம்போல்வதாங்கதுகண்டிலமே. (உ)

இதுவுமது.

முலைப்பகையோகட்பகையோவவர்தம்முகப்பகையோ
மலைப்பகையாம்விண்முழுதாளியென்றும்வணங்குமயன்
றலைப்பகையாயகரமுடையான்வெங்கைசார்ந்துநின்ற
சிலைப்பகையாகுநறுநுதலார்தந்திருமனையே. (௩)

துணிவு.

சேணும்பிலமுடிலர்மாளிகையுஞ்செழுஞ்சிலம்பு
நாணும்படிநம்படியேதவப்பயனண்ணியமை
பூணும்பணியரன்வெங்கையின்மாநிழற்பூம்பொழில்வாய்க்
காணும்பிறைநுதலாட்சுமவாநின்றுகாட்டியதே. (௪)

குறிப்பறிதல்.

பாயுமலர்த்தண்பொழில்சூழும்வெங்கைப்பழமலைசீ
ராயுமுனிவரர்தாமேமுனிவருளாக்குதல்போ
னேயுமந்நோய்க்குமருந்துந்தராநிற்குதூற்பகவிற்
றேயுமருங்குற்பெருமுலைமாதர்திருக்கண்களே. (௫)

இயற்கைப்புணர்ச்சி.

இரந்துபின்னிற்றற்கெண்ணல்.

புரந்தாடுமையர்திருவெங்கைவாணர்பொருப்பினின்ற
வரந்தாழயிற்கண்மடமாதிரத்தக்கவாறதனு
லிரந்தாய்குவமிவர்தந்தனநாமின்றினியநெஞ்சே
கரந்தானமக்குப்பழியுளதாயிற்கழறுகவே. (௬)

இரந்து பின்னிலைநிற்றல்.

தாளுந்தரக்கன்றனைமீண்டெடுத்துய்யத்தண்ணளியா
லாளும்பழமலைவெங்கையன்னீரொன்றலாதுபல
வாளுங்கணையுங்கதிர்வேலுமானுமதர்விழியா
னீளுந்துயர்செய்துவாளாநின்றீரிதுநீதியன்றே. (௭)

முன்னிலையாக்கல்.

பாரக்கைச்சூலத்தர்வெங்கையிலேகண்பகைத்துநின்ற
வாரக்கட்பூஞ்சுனைப்போதையெல்லாமடலோடுமெடற்
சேரக்கட்டிக்குழற்காட்டிலிடாமற்சிறந்தவலங்
காரக்கட்பேதைதனித்துநின்றாயென்னகாரணமே. (அ)

மெய்தொட்டுப்பயிறல்.

மெய்கூறிடும்வரைமங்கைமணாளர்தம்வெங்கையினிற்
பொய்கூறிலஞ்சிலர்போலிலையேயெனப்புல்லிழையிற்
செய்கூறதிலொன்றளவுளதேயிவள்சிற்றிடைதான்
மைகூர்குழலில்வெறிகொண்டுலாவுமதுகரமே. (கூ)

இதுவுமது.

மன்னிசைவெங்கையுடையபிரான்வரைமானுசுப்பைப்
பொன்னிசைகொங்கையொடித்தாலுநிந்தைபொருந்துநுமை
மின்னிசைமென்குழலேறன்மின்னீவிர்விளங்கிலிரோ
வின்னிசைவண்டினங்காள்காகதாலியமென்பதுவே. (கo)

பொய்பாராட்டல்.

முழுதலங்காரமழுவோன்றிருவெங்கைமொய்குழலுன்
பழுதறுங்கொங்கைக்குடைதுயராற்பனிமாமலய
மழுதகண்ணீரைப்பொருகையென்பாரதன்வெய்துயிர்ப்பை
யெழுதருந்தென்றலெனவேயுலகரியம்புவரோ. (கக)

இதுவுமது.

உன்மலைவார்முலைநல்லேர்கவர்ந்ததுதவுதற்குப்
பொன்மலைநாணெண்கழுத்தொடுதாளுறப்பூட்டிவெங்கை
மன்மலைமாதுமைபங்காளன்முன்னம்வளைத்ததன்றி
வின்மலையாக்குதலென்மிளிர்வேற்கண்விளங்கிழையே. (கஉ)

(கo) காகதாலியம் - ஓர்நியாயம்; இது காக்கையேறப் பனம்பழம் விழுந்ததென்பது.

இடம்பெற்றுத்தழால்.

வந்தாளுமையர் திருவெங்கைவாணர்வரையிணங்கே
நந்தாமணிவிளக்குற்று திர்பூவணைநன்கமைந்த
பைந்தாதுகுக்குங்கணிபேறுமல்லிகைப்பந்தரிடஞ்
சிந்தாகுலமறநாமிசையோர்மணஞ்செய்வதற்கே. (கங)

வழிபாடுமறுத்தல்.

அகலாதடைக்கலம்புக்கபுட்காகத்தன்னுகமெல்லா
மிகலாயரிந்துபுரந்தவற்காத்தவர்வெங்கையிலே
யிகலாதயற்சந்தனம்படர்ந்தேறுமிளங்கொடியே
புகலாயெனக்குயிர்போலுநன்னுணைப்புரந்தருளே. (கச)

இடையூறுகிளத்தல்.

மதயானையீருரியூடேமறைந்துமழைமறைத்த
வுதயாதிபனெனநின்றார்தம்வெங்கையிலுன்றனைப்போற்
கதையாலெனினுமறிந்திலம்வேள்கலகத்தணங்கே
புதையாதுபைம்பொற்குடங்கிர்வாளைப்புதைப்பதுவே (கரு)

நீடுநினைந்திரங்கல்.

சூலக்காத்தர் திருவெங்கைவாணர்முன்சுட்டமத
னீலக்கணையிற்கைவைத்தானினிச்சற்றுநேரநிற்பிற்
காலற்கிரையிடுமென்னுவியையிந்தக்காரிகையார்
கோலக்களபக்குன்றென்றேமருங்குறுகுவதே. (கசு)

மறுத்தெதிர்கோடல்.

சந்தாபவெந்தழறன்னடியார்க்குத்தணித்தருளுஞ்
செந்தாமரைமலர்த்தாளர்தம்வெங்கைச்செழுஞ்சிலம்பி
னந்தாமதுகையொடுபிறப்பேழுநமைத்தொடர்ந்து
வந்தார்தமையிந்நிறையோவராமன்மறிப்பதுவே. (கஎ)

(கங) இசையோர்மணம் - காந்தருவவிவாகம்.

(கச) புரந்தவன் - சிபிச்சக்கரவர்த்தி. (கஎ) சம் - பிறப்பு.

மகாமகோபாத்யாய, டாக்டர்

[illegible] நாவலர் நூல் நி[illegible]

களவியல்.

வறிதுநகைதோற்றல்.

புல்லார்பவர்கணைற்சோறுபெற்றுங்குப்பொருந்தியென்று
மல்லார்மதியநிலவுண்சகோரமருந்தவுங்கல்
வில்லார்திருவெங்கையன்பர்முகாம்புயம்வீறுதவு
நல்லார்வதனமதியிடந்தோன்றுநகைநிலவே. (கஅ)

முறுவற்குறிப்புணர்தல்.

தனிவானவர்நந்திருவெங்கைவாணர்தழலெறிப்ப
முனிவானகைசெய்நகைபோல்வதன்றிம்முகிண்முலையார்
பனிவாண்மதிமுகத்தேயெனையாளப்பரிவின்மனக்
கனிவாவெழுநகையீதம்பிகாமக்கடலினுக்கே. (கக)

முயங்குதலுறுத்தல்.

கொங்கைக்குவடுமணியல்குற்பாம்புங்குறுமுனிவ
னங்கைத்தலமடங்காவிழிவாரியுமாங்கிருப்ப
வெங்கைப்பழமலையாரருளாலவ்விசும்பறியா
மங்கைப்பருவத்திவள்வாயமுதிங்குவாய்த்ததுவே. (உ0)

புணர்ச்சியின்மகிழ்தல்.

தாண்டுஞ்சினவிடையெம்மான்றனிவெங்கைத்தண்சிலம்பில்
யாண்டும்பெறலருமின்பமெல்லாமைம்புலனுமின்று
தூண்டுஞ்சுடரொனநின்றவிம்மாதரிற்றுய்த்தனவால்
வேண்டும்பொருணமக்கேதோவினியிந்தமேதினிக்கே. (உக)

புகழ்தல்.

புறந்தாழ்குழலுமைபங்காளர்வெங்கைபுரத்தர்வெற்பிற்
குறைந்தாலிவணுதலொவ்வாய்நினதுகுறைநிறைந்தாற்
சிறந்தாயிழைமுகமொவ்வாய்விளங்குஞ்செழுங்கலையா
னிறைந்தாலென்னன்றிக்குறைந்தாலென்னெங்கட்குநீமதியே

வன்புறை.

அணிந்துழிநாணியது ணர்ந்துதெளிவித்தல்.

மன்றுடிய திருவெங்கைபுரேசர்மணிவரைமே
னனறுயணிகுவனென்றுலுநின்பெருநாணையஞ்சிக்
குன்றொதிரொலிபோலநின்பாங்கியாகோலணியா
வின்றுயிழையணிந்தேன்வெருவேனெஞ்சிளங்கொடியே.(உ௩)

பெருநயப்புனைத்தல்.

கடக்கும்பவத்தர் திருவெங்கைவாணர்கனகவெற்பிற்
குடக்குங்குமமுலையாண்மாட்டலாமற்குலவளிகா
ணடக்குங்கமலமுநோக்குங்குவளையுநாணிலவை
யடக்குங்குமுதமுங்கண்டதுண்டோவுங்களாவியிலே. (உ௪)

தெய்வத்திறம்பேசல்.

நதிவசத்தாயசடையார் திருவெங்கைநாட்டொருவர்
மதிவசத்தாலன்றிவான்கூன்மதிநுதல்வல்லிசதா
கதிவசத்தால்வரும்வள்ளிதட்போதின்கடிமணம்போல்
விதிவசத்தால்வருநங்கேண்மையாவர்விலகுவரே. (உ௫)

பிரியேனென்றல்.

பாவிடைவைத்தபெரும்புகழ்வெங்கைப்பழமலைகைம்
மாவிடைவைத்தவிகல்வாள்விழியெழின்மாதர்தமை
நாவிடைவைத்தவன்மார்பிடைவைத்தவனுணவகப்
பூவிடைவைத்தநினையோபிரிகுவன்பூங்கொடியே. (உ௬)

பிரிந்துவருகென்றல்.

உழைதொட்டவங்கையர்வெங்கையர்ஞானவொளியர்வெற்பி
லிழைதொட்டுவிம்மிமலையோடிகலுமிளமுலையாய்
மழைதொட்டுநின்றவிப்பூம்பொழிற்புக்குமணிமகரக்
குழைதொட்டுமீளுநின்கண்போல்விளைந்துகுறுகுவனே.(உ௭)

(உ௫) சதாகதி-காற்று. (உ௬) கைம்மா - கையிலுள்ளமான்.

இடமணித்தென்றல்.

சீருக்கயல்விழிமாதேதென்வெங்கைச்செழும்பதியான்
கூருய்த்திகழ்திருமேனியுமாதுமைகூறுடலும்
வேருய்ப்புணாவதென்னேவந்துன்சாரல்வியன்பதியு
மாருப்பழனத்தெமதூருமொன்றிமருவுறுமே. (உஅ)

தெளிவு.

பழிமாற்றியபுகழ்வெங்கைபுரேசர்பனிவரைமேன்
மொழிமாற்றெனும்பொருள்கோளினல்லாமன்மொழிபிறழார்
சுழிமாற்றியவுந்தியாய்வருவேனெனச்சொல்லியவவ்
வழிமாற்றமும்பிறழ்மோபிறழாதுமறப்பினுமே. (உகூ)

பிரிவுழிமகிழ்ச்சி.

செல்லுங்கிழத்திசெலவுகண்டோத்தோடு சொல்லல்.

உடையோர்சிறிதொருகைதூக்கிவீசியொருகையினைப்
புடையோடரிக்கணிலனேக்கிச்சிற்றெலிப்பூணுடனே
சடையோர்திருவெங்கைவெற்பினம்மாவிதனிநெஞ்சமே
நடையோதிமங்கள்கண்டென்னேபறக்கநடக்கின்றதே. (ரு0)

பாகனேடுசொல்லல்.

பொன்னங்கிரிநிகர்திண்டேர்செலுத்தும்புகழ்வலவா
மின்னஞ்சடையர்திருவெங்கைவாணர்தம்வெள்ளருவித்
தென்னஞ்சிலம்பிவிடைமிடித்தார்தமைத்தேடியெதி
ரன்னம்பிடியெனவேநடந்தேகுநம்மாயிழையே.

பிரிவுழிக்கலங்கல்.

ஆயவெள்ளம்வழிபடக்கண்டிது மாயமோவென்றல்.

ஆயவெள்ளத்தினடுவேயிருக்குமரசவன்னம்
பாயவெள்ளத்தமுதுற்றுங்கெனக்ககப்பட்டதுதான்
மேயவெள்ளச்சடையெம்மான்றிருவெங்கைவெற்பிலொரு
மாயவெள்ளக்கனவோவறியேனெஞ்சமாழ்குவதே. (௩௨)

வாயில்பெற்றுய்தல்.

சேவையுகைப்பவர்வெங்கைபுரேசர்சிலம்பின்மய
ணேவையொழிப்பமருந்துகண்டோமினிநோவனெஞ்சே
பூவையுருத்தமொழியார்மழைக்கட்பொறிவண்டுதான்
பாவையொருத்திமுகாம்புயத்தேசென்றுபாய்கின்றதே. (௩௩)

பண்புபாராட்டல்.

நிதிமுன்மிடியர்மனம்போலவாவிநிகரில்வெங்கைப்
பதிமுன்புகுமுதுகுன்றுடையார்பதம்பண்டடைத்த
மதிமுன்மரையுமரைநாயகன்முன்மதியுங்கண்டோர்
விதிமுன்கொணருமிவர்முகம்போலவியக்கிலரே. (௩௪)

பயந்தோர்ப்பழிச்சல்.

செந்தாமரையுமரிமார்புமென்னத்திருமகடா
னந்தாமனையிடையின்றிருந்தாங்கெந்தநாளுமுற
வந்தாழ்சடையவர்வெங்கையிலேநமதாவிநிற்ப
வந்தாரமுதிதழ்தந்தாரைத்தந்தவர்வாழியவே. (௩௫)

கண்படைபெறுதுகந்துரைதல்.

அரவாம்பணியினர்வெங்கைபுரேசரணியழகின்
வரவாங்கதிரொன்றுறுமோவுடுமொக்குள்வந்தெழவே
விரவாம்புயற்றரவோடவிர்மாமதிவெள்வளைசே
ரிரவாங்கடலில்விழுந்தமிழ்வேனையெடுப்பதற்கே, (௩௬)

இடந்தலைப்பாடு.

தந்ததெய்வந்தருமெனச்சேறல்.

மின்றந்தவேணியர்வெங்கைபுரேசர்மிகுமருளா
லன்றந்தவாரிநடுவேயொருவனகற்றியிட்ட
பொன்றந்ததெய்வமன்றோமலர்மாவைப்பொழிலிடத்தின்
முன்றந்ததின்றுந்தருநெஞ்சமேசெலின்முந்துறவே. (௩௭)

முந்துறக்காண்டல்.

அங்கஞ்சுமந்ததிருமார்புடைவெங்கையானருளால்
வங்கஞ்சுமந்தகடற்பிறவாமல்வருமமுதஞ்
சிங்கஞ்சுமந்தகரியுடனேயொண்செழுந்தரளச்
சங்கஞ்சுமந்தசெந்தாமரைதோன்றத்தனிவந்ததே. (௩௮)

முயங்கல்.

மடலுமணமுமெனவேநிறைவெங்கைவாணர்தமைத்
தொடலுமடியர்பெறும்பேறெனவிவடோண்மருவி
யுடலுமுயிருமனமுமெலாம்வளர்ந்தோங்குமின்பக்
கடலுளழுந்தியவசமுற்றேதையுங்கண்டிலமே. (௩௯)

புகழ்தல்.

நாங்குழையாமலருள்வோன்றிருவெங்கைநாயகன்கைத்
தாங்குழையேயன்றிமென்முலைதாங்கித்தளருமிடைப்
பூங்குழையாயெப்படிகுதித்தாலுமிப்புல்லறிவாய்
நீங்குழையோநின்மதர்வேனெடுங்கணிகர்ப்பதுவே. (௪௦)

ஆயத்துய்த்தல்.

வானேக்கிநிற்கும்பைங்கூழ்போலவுமொருமன்னவன்செங்
கோனேக்கிவாழுங்குடிபோலவுந்தடங்கோட்டிமையத்
தேனேக்கிநிற்குமெழிலுடையான்வெங்கைச்செல்வியுனைத்
தானேக்கிநிற்குகல்லாயத்துளேசென்றுசார்ந்தருளே. (௪௧)

(௩௭) ஒருவனென்றது ஏலேலசிங்கனை.

பாங்கற்கூட்டம்,

தலைவன்பாங்கனைச்சார்தல்.

கன்னியுந்தானுமொன்றுனேன்றிருவெங்கைக்கண் ணுதல்போ
வன்னியுங்காற்றுங்கலந்தேறியவெம்மதனைவெல்லச் [ல்
சென்னியுஞ்சேகரமும்போனமக்குச்சிறந்தநண்பன்
மன்னியிங்கோர்துணையாயினல்லாமல்வலியில்லையே. (சஉ)

பாங்கன்றலைவனையுற்றதுவினுதல்.

இலங்காபுரிமன்னன்றுளிறவுன்றியவீசாவெங்கை
யுலங்காதவிக்குந்திண்டோளுரவாகடலூர்ந்திடினும்
விலங்காமறலியொருகோடிதூதொடுமேல்வரினுங்
கலங்காவுளமுங்கலங்கிநின்றுயென்னகாரணமே. (சரு)

தலைவனுற்றதுரைத்தல்.

மலைவன்பணியரிவின்னுண்கணைசெய்துவந்துவெங்கைத்
தலைவன்புரமிரண்டொன்றேவெலவிச்சகமனைத்துஞ்
சிலைவன்குணங்கணைவேழஞ்சுரும்புலர்செய்துவென்றுேன்
முலைவன்கிரியுறவந்தநண்பாவொருமொய்குழலே. (சச)

கற்றறிபாங்கன்கழறல்.

போதைப்பொதிந்திட்டிருடுங்களகப்பொருப்பிமைய
மாதைக்கலந்ததிருவெங்கைவாணர்மதுரைச்சங்க
மேதைப்பசுந்தமிழ்ப்பாற்கடனீந்தியவீரமொரு
பேதைக்குடைந்துநின்றுய்தகுமோசொல்பெருந்தகையே. ()

கிழவோன்கழற்றெதிர்மறுத்தல்.

ஊணுமெனஞ்சுவந்தோன்றிருவெங்கையூரிலுயர்
சேணுமுலகம்வறிதாகவந்தவச்சேயிழையார்
பூணுரமென்முலையின்பெருங்காட்சியும்பொய்யிடையின்
காணுமையுங்கண்டனையாயினண்பகழறிலையே. (சரு)

(சஉ) வன்னி - கிளி.

கிழவோற்பழித்தல்.

அண்டாதிபர்நந்திருவெங்கைநாயகர்க்கன்றியொரு
பெண்டாலிதயமுருகினையாயிற்பெருந்தகைநீ
விண்டாரகைகண்டினியிந்துகாந்தமுமெய்யுருகும்
வண்டாமரைகளுமின்மினிதோன்றமலர்ந்திடுமே. (சஎ)

கிழவோன்வேட்கை தாங்கற்கருமைசாற்றல்.

பாலாமொழியுமைபங்காளர்வெங்கையம்பாவைதந்த
மாலாழ்தருமெனைவெவ்வுனாயானண்பவாட்டுகின்றாய்
காலாழ்களரினமிழ்ந்தவெங்கோட்டுக்களிற்றையொரு
வேலாலெறிபவர்போலேயிதுவென்விதிவசமே. (சஅ)

பாங்கன்றன்மனத்தழுங்கல்.

பெட்டுப்பட்டாவுரிகொண்டோன்றென்வெங்கைப்பிரான்வரை
மட்டுப்பட்டாவிமலர்வாரிசமுகவல்லிமுகை
முட்டுப்பட்டானையனையானிடையெனுமோரிழையாற்
கட்டுப்பட்டானினியென்செய்குவேனிந்தக்காசினிக்கே. (சக)

தலைவனோடழுங்கல்.

நாட்டுமெலிபுகழ்ப்பெம்மான்றிருவெங்கைநாட்டிறைவ
கோட்டுவரிவிற்கொலைவேடர்தந்தகொடியிடையாள்
பூட்டுமயற்றொடர்நீயேபடினெவர்போக்குறுவார்
காட்டுமிரவிக்கிரவியுண்டோவிருள்காய்வதற்கே. (ரு0)

எவ்விடத்தெவ்வியற்றென்றல்.

தழைந்தார்மலிசடையீசர்தம்மாதின்றடமுலைக்குக்
குழைந்தார்திருவெங்கைநாயகனுரிடங்கொண்டுதனி
விழைந்தார்நினதகத்திற்றிட்டிவாயிடைவேழமொடு
நுழைந்தாரிடமியலெல்லாமிறைவநுவன்றருளே. (ருக)

அவனஃதிவ்விடத்திவ்வியற்றென்றல்.

நறையேயிதழிபுனைவார் திருவெங்கைநாதர்சடைப்
பிறையேநுதலுவர்மானேகருங்கண்பிடித்துடிப்
பறையேயிடையணிபாம்பேயகலல்குல்பற்றுமலை
யிறையேமுலைமலர்த்தண்டலையேயிடமென்னுயிர்க்கே. (ருஉ)

பாங்கனிறைவனைத்தேற்றல்.

தடங்கொண்டகண்ணியிடத்தார் திருவெங்கைத்தண்டலையை
யிடங்கொண்டுகாமப்புனனீந்திநீகரையேறுதற்குக்
குடங்கொண்டுநின்றவொருமாதைக்கண்டுகுறுகுமட்டுந்
திடங்கொண்டுநெஞ்சந்தளராதுநிற்றிதிறலவனே. (ருங)

தூதிவழிச்சேறல்.

காவியுமாம்பலும்பூத்தசெந்தாமரைகண்டளிகள்
வாவியுமோடையும்விட்டெய்தவேபொழில்வாய்நிற்குமோ
தேவியுமானும்விளையாடிடத்தர் திருவெங்கையி
லாவியுமாரமுதும்போன்றிறைகண்டவாயிழையே. (ருச)

இறைவியைக்காண்டல்.

கைகையேமுலைசெழும்போதேமுகமலர்மூசுவண்டின்
கைகையேகுழல்செந்தளிரேயடிநற்சுவைக்கனியே
கைகையேயிதழ்திருவெங்கைபுரேசர்கைந்நவ்விமிகும்
பகையேயெனுங்கணிவரேயிறைசொன்னபைங்கொடியே. (ரு)

இகழ்ந்ததற்கிரங்கல்.

புடையேயுமையொடுஞ்செங்கதிர்வேற்கைப்புதல்வனொடும்
விடையேயிவர்தரும்பெம்மான்றிருவெங்கைவெற்பிலன்னப்
பெடையேயெனவந்திளங்காவுறுமிப்பெருந்தனத்தா
ரிடையேயிலையெனினைந்திளையான்கொலிறையவனே. (ருசு)

தலைவனைவியத்தல்.

சூடும்பிறையர்திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
பாடுங்கவியுளடங்காக்கவினுடைப்பாவையன்னார்
கூடுங்குவிமுலைக்குன்றுங்கண்வேலையுங்கூந்தனெடுங்
காடுங்கடந்துவந்தான்மிகவீரனங்காவலனே. (கூஎ)

தலைவியைவியத்தல்.

பருத்தகுவிமுலைப்பாரத்தினுற்கடற்பங்கயத்தி
லிருத்தலரிதெனவந்துவன்பூவிலிருக்குமிவர்
விருத்தகிரிமகிழ்வெங்கைவெற்போன்மயல்வெள்ளங்கொண்டு
வருத்தவிதயமலர்மீதிருந்திடவல்லவரே. (கூஅ)

தலைவன்றனக்குத்தலைவிநிலைகூறல்.

இயலாற்சிறந்ததிருவெங்கைவாணரிமையவெற்ப
மயலாற்புரிந்தமுலையானையின்முன்மதர்மழைக்கட்
கயலாற்கலக்குவித்துன்கலைவேலையைக்காரளகப்
புயலாற்பருகுவித்தார்நின்றுளார்தண்பொழிலிடத்தே. (கூக)

தலைவன்சேறல்.

ஏழாமுலகும்புகழ்வெங்கைவாணரிமையவெற்பி
லாழாதெனைநெடுங்காமக்கடனின்றனைத்தெடுப்பார்
தாழாதிசையளிமூசுமென்பூந்துணர்த்தண்கொம்பரோ
சூழாயமாகநடுநிற்ப்ரோவிந்தச்சோலையிலே. (கூ0)

தலைவியைக்காண்டல்.

தளைப்பாசநாசகர்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பிற்
களைப்பான்மதிமுகக்காரிகையீர்தண்களபமுலைக்
கிளைப்பாரமென்பெருந்தோண்மேலிருத்திநைகின்றவிடை
யிளைப்பாறவோதனிநின்றீரிக்காமரிளம்பொழிற்கே. (கூக)

கலவியின்மகிழ்தல்.

துதிவாய்தொறுங்கொளுமென்மலர்ப்பூம்பொழில்சூழ்ந்தவெங்
பதிவாய்வளையிளமாலோடமர்ந்தபரனருளாற் [கைப்
றிதிவாய்மதியமிர்தம்போலலாமற்சிறந்தமுக
மதிவாயமிர்தமுண்டோம்வந்துகூடவிம்மங்கையரே. (சுஉ)

புகழ்தல்.

சங்கந்துறந்தன்னமில்லாமலேயொருதாளினின்று
பொங்கம்புனலிற்றவம்புரிந்தாலும்புரைகுவீரோ
வங்கம்பலவணிந்தார்வெங்கைவாணரணிவளைமே
லிங்கம்புயமுகைகாளிந்தமாதரிளமுலைக்கே. (சுரு)

பாங்கியோடுவருகெனப்பகர்தல்.

பங்கேருகத்திற்கடுத்தசெந்தாவிப்பனிமலர்போ
லுங்கேளெனுமுயிர்ப்பாங்கியொடேமறைநான்முகத்திற்
சங்கேதமாம்பெயர்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பி
லிங்கேவருகவென்னெஞ்சாலயத்திலிருப்பவரே. (சுச)

பாங்கிற்கூட்டல்.

கார்கண்டமஞ்ஞையுஞ்செந்தேனிரம்பக்கடைதிறக்குந்
தார்கண்டவண்டுந்திருவெங்கைநாயகர்தாண்மலரின்
சீர்கண்டவன்பரும்போலேநிற்கண்டுசிறக்குமுளப்
போர்கண்டவேற்கண்மடவாரைமேவுகபூங்கொடியே. (சுரு)

பாங்கிமதியுடன்பாடு.

தோற்றத்தாலராய்தல்.

எனையாடியபதத்தாள்வோன்றிருவெங்கையேந்திழைநீ
சினையாடியமணிப்பொன்னூசலாடிச்செழுங்குவளைச்
சுனையாடிவண்டல்விளையாடிமுத்தந்துவன்றியவம்
மனையாடிவந்தனையோதிருமேனிவருந்தியதே. (சுசு)

ஓழுக்கத்தாலேயந்தீர்தல்

கொற்றிக்கிசைந்தபுயத்தார் திருவெங்கைக்கோமளமே
நெற்றிக்குடைந்ததென்றெள்ளப்படாதந்தநெற்றியின்மேல்
வெற்றிக்கமலக்கரங்குவித்தேயின்றுவிண்ணினெழு
மற்றிப்பிறைத்தெய்வங்கன்னியர்யாரும்வணங்குவதே. (சுஎ)

சுனைநயப்புரைத்தல்.

கடைக்கண்சிவந்திதழொன்றேவெளுப்பக்கலவியினு
ளிடைக்கண்மெலிவுதருங்கொங்கைமேலதுவேயழிய
விடைக்கண்விரும்பியுறைவார் திருவெங்கைவெற்பிடத்திற்
றொடைக்கண்மலர்க்குழலாய்சுனையாதினுட்டோய்ந்தனையே.

சுனைவியந்துரைத்தல்.

ஒளியார்குமுதநல்வெள்ளாம்பலாகவொழிவறுதண்
ணளியார்கருநெய்தல்வந்துசெந்தாமரையாகச்செய்யி
லெளியார்டியவர்க்கானார்தம்வெங்கையில்யாரொருவர்
குளியார்மதிநுதனீயாடியவக்குளிர்சுனையே. (சுக)

தகையணங்குறுத்தல்.

பண்ணாடுமின்சொலுமைபாகர்வெங்கைப்பனிவரைமேல்
விண்ணாடிழிந்துவருந்தெய்வமாதுவிளங்குறுமென்
கண்ணாடிருந்தபெண்ணின்னீழலாகக்கருத்திடைநீ
யெண்ணாடிருந்துக்வேலிவடானெங்களேந்திழையே. (எ0)

நடுங்கநாட்டம்.

எதிராக்கவினுமைபங்காளர்வெங்கையிறைவர்சடை
முதிராப்பிறையைந்தலைநாகமீன்றமுழுமணியின்
கதிராற்சிவந்ததுபோற்சேந்தகோட்டுக்களிற்றைமல
ருதிராக்கொடியனையாயின்றுநான்கண்டுடைந்தனனே. (எக)

பெட்டவாயில்பேற்றிரவுவலியுறுத்தல்.

அருவாயுருவமுமாம்வெங்கைவாணரரும்பதத்தைக்
குருவாலடைபவர்போலுயிர்ப்பாங்கியைக்கொண்டுமெல்லப்
பெருவாரறநிமிர்ந்தோர்தூன்மருங்குற்பெரும்பழியை
வெருவாதெழுமுலைப்பெண்ணரமுதத்தைமேவுதுமே. (எஉ)

ஊர்வினாதல்.

வலைநடுவந்தவிளங்கலைபோனும்மணிவடந்தாழ்
முலைநடுவென்னவிடமறவேவந்துமுட்டுமிரு
மலைநடுவந்துநொந்தேனுரையீர்நும்வளம்பதியா
தலைநடுவந்தநஞ்சுண்டபிரான்வெங்கையன்னவரே. (எங)

பெயர்வினாதல்.

ஊரானதிங்குளாயீராயினுமென்னுளங்குளிரச்
சீரார்திருவெங்கைமாநகரார்தந்திருப்பெயர்போற்
பாரார்பருவங்கண்டேமறையாகப்பகர்வதன்றே
பேராயினுமுரையீர்பிறைவாணுதற்பேதையரே. (எச)

கேடுதீவினாதல்.

பைங்காஞ்சனவரைவில்லாளர்வெங்கைப்பனிவரைமேற்
செங்காந்தளன்னமென்கைம்மடவீர்செங்குருதிபொங்க
வங்தார்ததன்பகுவாய்போலவேல்பட்டழுந்துபுண்ணோ
டுங்காம்புனத்தயல்வந்ததுண்டோநல்லிளங்களிறே. (எரு)

ஒழிந்ததுவினாதல்.

[illegible]ப்பொடித்தார்செவ்வாம்பன்மிஞிறுவப்பச்
[illegible]மிழ்வயல்வெங்கையிலேகடற்றோட்டலரா
யொழிந்தேவருமடவீரளியேனின்றுளம்வருந்த
மொழிந்தேனிலாததென்னோவுங்கள்வாய்க்குமுதமலர்க்கே. ()

யாரேயிவர்மனத்தெண்ணம்யாதெனத்தேர்தல்.

ஊரேதென்பாரதைவிட்டேயருகுவந்தும்முடைய
பேரேதென்பார்கரிகண்டதுண்டோவெனப்பேசிநின்று
வாரேறுகொங்கைக்குடநோக்குவார்வெங்கைவாணர்வெற்பி
லாரேயிவர்மனத்தெண்ணமென்னேயென்றறிந்திலமே. (எஎ)

எண்ணந்தெளிதல்.

ஊர்கேட்கவுநம்பெயர்கேட்கவுநின்றுழல்பனைகைக
கார்கேட்கவும்வந்தவரோயலரிவர்கன்னியுமை
சீர்கேட்குமையர்தென்வெங்கையிலேயிவள்செய்யவிள
நீர்கேட்கவந்தவரோபற்றுகாமநெருப்பினுக்கே. (எஅ)

தலைவன்கையுறையேந்திவருதல்.

கொடையாளர்கையிற்பொருள்போற்சிறுமென்கொடிபுரையு
மிடையாளிகுளையுடனிருந்தாளினியேதுகுறை [ன்
விடையானிணையிலிவெங்கைப்பிரான்றன்விழிக்குடைந்தோ
படையான்மெலிந்தவெல்லாநெஞ்சமேமுன்பகருதுமே. (எகூ)

தலைவனவ்வகைவினாதல்.

கானைக்கலையொன்றெனதம்புபாயக்கலைமதியின்
மானைப்புணரவெழல்போலவேதுள்ளிவந்ததுண்டோ
வானைத்தலைமகற்பெற்றோன்றிருவெங்கையாவியிள
மீனைப்பொருதகன்றொள்வாளிகளும்விழியவரே. (அ0)

எதிர்மொழிகொடுத்தல்.

மானக்கலைளெட்டெட்டும்வல்லீர்கொன்றைவார்சடையிற்
கூனற்பிறைபுனையெம்மான்றென்வெங்கைகொடிச்சியரே
மேனற்புனத்திற்கிளிபார்த்திதணினிருப்பதன்றிக்
கானக்கலையைத்தனிபார்த்திருக்குங்கருத்திலமே. (அக)

இறைவனைநத்தல்.

தேனனையாவருமாமலராலச்சிலைமதவேண்
மானனையாரைவருத்துமென்பாரினறுமாந்தழையாற
கூனனையாமதிவாரசடையாவெங்கைக்குன்றில்விழி
மீனனையாயிவரெய்தார்பெருங்கலைவீழ்ந்திடவே. (அஉ)

பாங்கி மதியினவரவர்மனக்கருத்துணர்தல்.

மான்வேட்டமீதும்புனங்காவன்மீதினும்வைத்தமனந்
தான்வேட்டகாதன்மறைப்பவெல்லாமயன்ருதையொடு
நான்வேட்டசெம்மலாததாளான்றிருவெங்கைநாட்டிலிவர்
தேன்வேட்டபூங்கண்களேயலர்துற்றிததெரிவிக்குமே. (அங)

பாங்கியிற்கூட்டம்.

தலைவனுட்கோள்சாற்றல்.

நற்றேமொழியுமைபங்கன்றிருவெங்கைநாடனையீர்
முற்றேரிழைமுலைமேனகையாதியர்முற்றுநுங்கள்
குற்றேவல்செய்யுமடந்தையராகக்கொடுப்பனின்னே
சற்றேயருட்கடைக்கண்பார்த்தென்னுவியைத்தாங்குமினே. ()

பாங்கிதலழறைகிளத்தல்.

பொய்ம்மேவரும்புனங்காவலர்யாங்கள்புனநடுவின்
வம்மேவுறும்துகாப்பவனீவளைசூழ்வதெம்மூர்
நம்மேலருள்வைத்தளிப்பார்திருவெங்கைநாட்டிலுன்னூர்
கும்மேல்வரும்வளைசெய்காட்டுவதொண்குலோத்துங்கனே. ()

தலைவன்றலைவிதன்னையுயர்த்தல்.

அலைமகளன்னவிலங்கிலைவேற்கணரிவைநல்லாய்
கலைமகள்வந்தனைசெய்வெங்கைநாதற்குக்கைகொடுத்து
மலைமகளண்டமுழுதாளினுங்கண்மலையரையன்
றலைமகணன்மைப்பெருமையையாதென்றுசாற்றுவனே. (அசு)

(அடு) புனநடுவில் வம்மேவுறும் அது - புவனம்.
கும்மேல்வரும்வளை - குவளை.

பாங்கியறியாள்போன்றுவினாதல்.

இஞ்சிப்புரமொருமூன்றெரிதசாவெங்கையீம்பொழிலவாய்ப்
பஞ்சிறசிறுதளிரமெல்லடிமாதர்பலரினுந்தான்
வஞ்சித்தெமையெம்முடனேயிருப்பினும்வந்துனது
நெஞ்சிற்புகுந்துமறைந்தவள்யாசொன்னெடுந்தகையே. ()

இறையோனிறைவிதன்மையியம்பல்.

போதேமுகமிளஞ்சேலேவிழிபசும்பொன்னுரைத்த
சூதேமுலைசெந்தளிரேயடிகதிர்ச்சோதியொடு
வாதேபுரியுந்திருமேனியர்வெங்கைமங்கையர்க்கு
மாதேயிடையொன்றுமல்லாமற்பொய்யல்லமற்றவையே. ()

பாங்கிதலைவியருமைசாற்றல்.

ஒறுத்துப்புரஞ்சுடுமெம்மான்றிருவெங்கையூரின்மலர் [யாற்
பொறுததுக்கொளும்பொன்னென்றெண்ணேலிராசிப்புதுததுலை
கறுத்துத்தழைந்தகுழலோடுகொங்கைக்கனத்தசெம்பொ [யே.
னிறுத்துகொளும்பொனன்றோ வெளிதோ சொனெடுந்தகை

தலைவனின்றியமையாமையியம்பல்.

பொங்கூழொளிநிகாவெங்கைபுரேசாபொருப்பிடத்தில்
வுங்கூழ்வழங்கும்வியன்ஞாலந்தன்னில்வளர்நெழுந்த
பைங்கூழ்புயலின்றமையாதவாறெனப்பாவைநல்லா
யிங்கூழ்தருமென்கொடியன்றிவாழ்தலின்றென்னுயிரே. (௧௦)

பாங்கி நின்துறைநீயேசென்றுரையென்றல்.

தீயேனுளங்குடிகொள்வெங்கைவாணர்செழுஞ்சிலம்பில்
ஹீயேறுமென்றொடைத்தோளண்ணலேயயல்வேறொருவர்
போயேயுரைப்பின்மனமிரங்காளெங்கள்பூங்கொடிக்கு
நீயேவணங்கிமனமுளைந்தோதுகநின்குறையே. (௧௧)

---

(௧௦) ஒளி - சூரியன்.

பாங்கியைத்தலைவன்பழித்தல்.

கல்லைக்குழைத்துப்பயின்றுளதாகியகல்வியுடைத்
தில்லைப்பதியினடமாடுமெங்கைச்சிவனையல்லாற்
சொல்லைக்கொடுநின்மனநாங்குழைப்பத்துணிதலொரு
புல்லைக்கொடுதண்கடனீந்தவுன்னுதல்பூங்கொடியே. (கூஉ)

பாங்கிபேதைமையுட்டல்.

மானைக்கவர்வம்மழுவிலையேல்வெங்கைவாணர்க்கந்த
வானைப்புணர்மதிகீள்வேமகப்படின்மானுக்கென்னுஞ்
சேனைக்குறவர்மகளாகியவிதத்திருந்திழையா
ளானைத்திறலுடையாயறியாளுன்னருந்துயரே. (கூங)

காதலன்றலைவி முதறிவுடமைமொழிதல்.

விடுத்தமயலுடையெம்மான்றிருவெங்கைவெற்பணங்கே [த்
யெடுத்தவிடைமுறிக்குங்கொங்கையேயன்றியென்னையெய்ய
தொடுத்தகுவளைக்கணைவாங்கிவின்மதன்றூணியிட
வடுத்தகடைக்கண்வைத்தாறியாமையறிந்திலரே. (கூச)

பாங்கி முன்னுறுபுணர்ச்சிமுறையுறக்கூறல்.

மருவீரவெண்மதிவேணிப்பிரான்வெங்கைவான்பொழில்வா
யிருவீருமொத்துப்புணர்ந்தாற்பயனுமக்கென்னையொன்னார்
பொருவீரவாள்விழிக்காப்பதினாயிரம்பொய்யுரைத்து
வருவீரறிந்திலிரேயுலகோதும்வழக்குரையே. (கூரு)

தன்னிலைதலைவன்சாற்றல்.

மண்ணைக்கொண்டுண்டபெருமான்றொழும்வெங்கைவாணர்
வெற்பிற்,பண்ணைக்கொண்டெற்றமொழியாயுனையன்றிப்பாரமு
லைப், பெண்ணைக்கொண்டின்பம்பெறநான்விரும்பப்பெறிலது
தான், கண்ணைக்கொண்டன்றிவழிதானடப்பக்கருதுதலே. ()

பாங்கியுலகியலுரைத்தல்.

வெண்டாமரைமுளைப்பாலிகைவாளரவிந்தச்செந்திக்
கொண்டாவியிற்சங்கமார்ப்பக்குவளைமணம்புணர்ந்து
வண்டாடுநெல்லியலூரவெம்மான்வெங்கைமாதினைநீ
கண்டாசைப்பட்டனையேல்வரைந்தேகொள்கடைப்பிடித்தே.

தலைமகன்மறுத்தல்.

தாமக்குழலைவரைந்துகொண்டேவெங்கைத்தாணுவெற்பிற்
காமக்கனலைத்தணிப்பாயென்றோதியகாரிகைநீ
நாமக்கிணைறகழ்ந்தந்நீர்கொடுநன்னகரிற்பற்றி
வேமக்கனலையவிப்பாயென்பார்களின்வேறலையே. (கூஅ)

பாங்கியச்சுறுத்தல்.

பால்கொண்டவத்தியெனவேயுடல்வடுப்பட்டவெமர்
வேல்கொண்டதம்முடற்புண்ணிலிட்டேவளைவேனிமிர்ப்பார்
சேல்கொண்டகண்ணியிடத்தார்திருவெங்கைச்சேயிழைக்கு
மால்கொண்டுநின்றுழலேல்வரைந்தேகுகமன்னவனே. (கூகூ)

தலைவன்கையுறைபுகழ்தல்.

கொண்டலங்கண்டர்திருவெங்கைவாணர்குளிர்சிலம்பிற்
றண்டளிர்வென்றசெந்தாண்மடவீர்நுந்தடமுலையா
முண்டகமென்முகைமேல்வாழலூசிமுனையினின்று
வண்டவஞ்செய்திங்குவந்தகண்டீரிம்மணிவடமே. (கஅ0)

பாங்கிகையுறைமறுத்தல்.

மல்லார்க்குந்தோளண்ணலேவெங்கைவாணர்வரையிற்பெண்க
ளெல்லார்க்கும்வந்தவிடைபோல்வதன்றிங்கிவட்கன்றியே
வில்லார்க்குநின்னணிகொங்கையிற்காணிலெம்வேடனொன்னும்
பொல்லார்க்குறங்கும்புலிவாயிடறுதல்போன்றிடுமே. (கஅக)

ஆற்றநெஞ்சினோடவன்புலத்தல்.

பாமாலைகொண்டதிருவெங்கைவாணர்பனிவரைமேன்
மாமாலைகண்ணியவென்னெஞ்சமேயிவ்வரியளிக
டாமாலைமென்குழலார்தமைவேண்டினந்தாண்முறிந்த
பூமாலையேறுங்கொலோவவர்வார்முலைப்பொற்குன்றமே. ()

பாங்கியாற்றுவித்தகற்றல்.

ஆனுக்களித்தகொடியாளர்வெங்கையணிநகராய்
பானுககளிததுவருங்காலைநீவரிற்பைந்தொடிககைத
தேனுககளிககுமலர்தொடைவார்குழறறேமொழியெம்
மானுககளிததுக்கலைகாக்குவனுன்கைவண்டழையே. (கஅரு)

இரந்துதுறைபெறதுவருந்தியகிழவோன் மடலேபோருளோனமதித்தல்.

எண்ணைவிட்டோங்கும்புகழாளவெங்கையிமையவெற்பில்
விணணைவிட்டெய்துமிவட்டருவாயெனமேவியுழும்
பண்ணைவிட்டோதொறும்புக்கிரப்பாரிற்பசியமடற் [மையே.
பெணணைவிட்டோபெண்ணைநாம் வேண்டிநிற்பதுபேதை

பாங்கிக் துலகின்மேலவைத்துரைத்தல்.

வாமத்துமைமகிழ்வெங்கைபுரேசர்மணிவரைமேற்
றுமக்குவிமென்முலைமட்டுவார்குழற்றையனல்லாய்
நாமகசடலைக்கலமிவர்ந்தேறுவர்நானிலதசோர்
காமக்கடலைமடன்மாவிவர்ந்துகடப்பர்களே. (கஅ)

அதனைத்தன்மேல்வைத்துச்சாற்றல்.

பாவாக்கிமுன்பெண்பனையாகவாண்பனைப்பாட்டருளுந்
தேவாக்கியாளுந்திருவெங்கைவாணரிற்றேர்ந்தெருக்கம்
பூவாக்கிமாலையணிந்துபொன்னேயொருபாற்பனையை
மாவாக்கிநாளையும்மூர்நடவீதிவருகுவனே. (க

பாங்கி தலைமகளவயவத்தருமைசாற்றல்.

மந்தாகினியணிவேணிப்பிரான்வெங்கைமன்னவநீ
கொந்தார்குழன்மணிமேகலைநூனுட்பங்கொள்வதெங்ஙன்
சிந்தாமணியுந திருக்கோவையுமெழுதிகொளினு
நந்தாவுரையையெழுதலெவ்வாறுநவின்றருளே. (கரஎ)

தலைமகன்றன்னைத்தானேபுகழ்தல்.

ஐயானனமுடையார்வெங்கைவாணரணிவரைமேற்
பொய்யாவிளமுலைமங்கைநல்லாரிடைபொய்யென்றதை
மெய்யாகச்சாதித்தெழுதாவிடிற்புகழ்வேண்டியயான்
கையாலெடுத்ததுதூரிகையேயன்றுகாரிகையே. (கரஅ)

பாங்கியருளியல்கிளத்தல்.

வென்றிப்படைநன்மழுவுடையார்திருவெங்கையிலே
குன்றிறபொலியுங்குவிமுலையாளொடுகூடவெண்ணி
நின்றிப்படிதளாவேலண்ணலேயென றுநீக்கமற
வன்றிற்பெடையொடுவாழ்வதன்றோபனையாவதுவே. (கரகூ)

பாங்கி கொண்டுநிலைகூறல்.

மூலத்தனிமுதலானார்திருவெங்கைமொய்வனையாய்
நிலைத்ததடங்கண்ணினாட்குன்குறைசொலநோந்திலளேற்
கோலத்தளிரியன்மாதின்கருங்கட்குடங்கவரத்
தாலத்திவர்கநினையாவர்பின்னைததடுப்பவரே. (கரஎ)

தலைவியிளமைத்தன்மைபாங்கி தலைவற்குணர்த்தல்.

பொடிக்கின்றகொங்கையிடைவருத்தாமுனம்பூவிரவி
முடிக்கின்றகங்குலளம்வருத்தாமுனமுத்தலைவேற்
பிடிக்கின்றவங்கையர்வெங்கையிலேயிளமபெண்ணினுக்கா
வடிக்கின்றவேலண்ணலேயென்கொலோசொல்வருந்துவதே.

தலைவன்றலைவிவருத்தியவண்ணமுரைத்தல்.

கருவுக்குமாமருந்தானார்தென்வெங்கைக்கனகவெற்பிற்
பொருவுக்குமாரொன்றிலாதெழுந்தோங்கியபூண்முலையாய்
திருவுககுமாலைத்தருமெழில்கூர்நுந்திருந்திழைக்கு
மருவுக்குவாசனைபோல்வந்ததாலென்னைவாட்டுவதே. (ककउ)

பாங்கிசெவ்வியருமைசெப்பல்.

கிளிக்குஞ்சுவையமுதூட்டாளக்கிள்ளைசொற்கேட்டுவவாள்
குளிக்குஞ்சுனையிற்குளியாள்சிலம்பெதிர்கூவுகிலா
ளளிக்குந்தொழிலுடையார்வெங்கைவாணரணிவரைமேற்
றுளிக்குஞ்செந்தேன்மலர்த்தாராயவட்கென்னசொல்லுவனே.

தலைவன்செவ்வியெளிமைசெப்பல்.

தேன்வந்தகொன்றைச்சடையாளர்வெங்கைச் செழுஞ்சிலம்பி
கான்வந்தவேரிப்புனற்கோர்சிறுவழிகாட்டுதல்போல் [ற்
யான்வந்தவாறுசிறிதுரைத்தாலிடையீடின்றியே
தான்வந்துகுங்குமக்கொங்கைகளாரத்தழீஇக்கொளுமே.(ककच)

பாங்கி யென்னைமறைத்தபினெளிதேனநததல்.

குற்றாலமுந்தென்றிருவாலவாயுங்குடியிருப்புப்
பெற்றார்பவர்திருவெங்கையிலேயெங்கள்பெண்ணணங்கின்
முற்றாமுலையையெனைமறைத்தின்பமுயங்குறுதல்
கற்றாவினைமறைத்தேயதன்பாலைக்கறப்பதுவே. (ककछ)

அந்நகைபொறுஅதவன்புலம்பல்.

தடாதுவிளங்கொளியானார்திருவெங்கைத்தையனல்லாய்
படாதுவளர்முலையால்வருநோயைப்பரிகரி
விடாதுநகைசெய்திகழ்வதளற்றில்விழுந்தவனா
யெடாதுமருமமுருவச்செவ்வேல்கொண்டெறிவதுவே.(ककज)

பாங்கிதலைவனைத்தேற்றல்.

தொடர்ந்தாளும்வெங்கைப்பழமலைவாணரச்சுந்தரர்சொற்
கடந்தாலுமென்சொற்கடவாள்வரிச்செங்கயன்மருட்டும்
விடந்தாழயிற்கண்மடமான்றருமயல்வெள்ளத்திலே
கிடந்தாகுலமுற்றிடேல்விடுவாயுன்கிலேசத்தையே. (ककள)

பாங்கிகையுறையேற்றல்.

ஏகநிலைத்தவுமைபாகன்வெங்கையிமையவெற்பின்
மாகநிலத்திலரிதாயவின்பம்வளர்ந்தெழுமே
பாகநிலப்பிறைவாணுதலாடன்பரவையல்குற்
போகநிலத்திலிட்டாளையனையுன்கைப்பூந்தழையே. (ककअ)

கிழவோனாற்றல்.

வன்மொழிபோலவுரைத்தவெல்லாமிந்தமங்கைநல்லா
ளின்மொழியேமனத்தன்புவிடாமலிசைத்தமையான்
மென்மொழிவாய்மைத்திருத்தொண்டர்தாமுனம்விட்டெறிந்த
கன்மொழிமாமலரன்றோ திருவெங்கைக்கண்ணுதற்கே. (ककक)

இறைவன்றனக்குத்துறைநேர்பாங்கி
யிறைவிக்கவன்துறையுணர்த்தல்.

வத்திரமைந்துடையார்வெங்கைவாணர்வரையணங்கைப்
பத்திரங்கொண்டருச்சித்தேவரங்கொளும்பான்மையரை
யொத்திரங்குள்ளமொடுபூந்தழைக்கையொருவரின்று
சித்திரமொன்றனையாயடைந்தார்நந்திருப்புனத்தே. (कउ०)

இறைவி யறியாள்போன்றுதறியாள்கூறல்.

வேலுக்குமம்புக்குமாறுகொண்டோடுமெவ்விழிமடவாய்
மாலுக்குநன்மனையாண்மனையாகிவழங்கும்வல்ல
கோலுக்குவல்லவண்ணமலையார்கட்டுகோயிலகப்
பாலுக்குவந்ததுகண்டாய்நம்வெங்கைப்பழமலையே. (कउक)

பாங்கியிறையோற்கண்டமைபகர்தல்.

போரையும்வேலையுமாறறிதன்வெங்கையிற்போதக்கண்டேன்
வாரையுங்கீள்பெருங்கொங்கையின்மேன்மனம்வைத்திருண்ட
காரையுஞ்சீறுமலர்க்குழலாய்கரியுங்கிரியும்
பேரையுஞ்சீரையுங்கேட்டுமென்போந்தபெருந்தகையே. (கஉஉ)

பாங்கியைத்தலைவிமறைத்தல்.

நாரணனென்முகன்காணார்சதானந்தர்ஞானபரி
பூரணாவெங்கைப்பழமலைவாணாபொருப்பின்மலர்த்
தாரணிவாகுழலாய்நிந்தைகூறதகாதுகண்டாய்
காரணமின்றிக்கலுழ்வாரொருவரைக்கண்டுகொண்டே. (கஉ௩)

பாங்கி யென்னைமறைப்பதேன்னெனத்தழால்.

மேலிலையென்னவுயர்ந்தார்திருவெங்கைவெற்பிலுள
மாலிலையென்னவெனைமறைத்தாய்திருமாலுறங்கு
மாலிலையன்னவயிற்றணங்கேயருந்தாய்க்கொளிதத
சூலிலைநெஞ்சறியாவஞ்சகமிலைச்சொல்லுதற்கே. (கஉ௪)

பாங்கிகையுறைபுகழ்தல்.

நீரையணியுந்திருச்சடையார்வெங்கைநிததர்வெற்பிற்
றூரையணியுமதன்றேர்கண்டம்மதழைத்ததுகாண்
வாரையணியுமுகிண்முலையாயணிவாய்த்தவல்குற்
றேரையணியுந்தகுதியதாமிந்தச்செந்தழையே. (கஉ௫)

தோழிகிழவோன்றுயர்நிலைகிளத்தல்.

வளங்கனிவெங்கைப்பழமலைவாணர்வரையினவ
ருளங்கனிவெண்மருப்போர்மதயானையொளிர்நுதலாய்
களங்கனியன்னமடப்பிடிவாயிற்கனிந்துவிழும்
விளங்கனிநல்கக்கண்டாரூரம்துண்ணும்விளங்கனியே. (கஉ௬)

மறுத்தற்கருமைமாட்டல்.

நந்தாவொளியர் திருவெங்கைநாட்டினமக்களிப்பச்
சந்தாடவியுளிறைவர்கொய்யாப்பைந்தழையுமில்லை
முந்தாவவர்கெதிர்நானுரையாப்பொய்ம்மொழியுமில்லை
வந்தாலினியெனக்கில்லைபெண்ணேயொருவார்தையுமே. ()

தலைவன் குறிப்புவேறுகநெறிப்படக்கூறல்.

போருடையானுடையார்வெங்கைவாணர்பொருப்பின்மணித்
தேருடையார்கருததேதோவறிந்திலந்தேமொழியா
யாருடையானினும்வேம்புடையானினுமையபனைத்
தாருடையானலனோமதிமானெனச்சாற்றினரே. (கஉஅ)

தலைவியைழனிதல்.

மறியேறியகைத்திருவெங்கைவாணர்மணிவரைமேற்
சிறியேனம்மெய்களிரண்டினும்வாழ்ந்திடுஞ்செய்யவுயி
ரெறியேரயில்விழியாயின்றுகாறுமிரண்டென்பதை
யறியேனறிந்தனனேலுரையேனிவ்வடாதனவே. (கஉகூ)

தலைவிபாங்கியைழனிதல்.

நாட்டுமலிபுகழ்வெங்கைபுரேசர்நயந்துகதி
காட்டுமமலரருளான்முன்றெய்வங்கடைப்பிடித்துக்
கூட்டுமொருவனைத்தானேநடுநின்றுகூட்டுதல்போ
லீட்டுமொழிகள்பலபகர்ந்தாளிவட்கென்சொல்வதே. (கஙO)

தலைவிகையுறையேற்றல்.

பலர்செய்தமென்றுதியாயினுங்கொச்சையம்பாலன்முதற்
சிலர்செய்தவின்றமிழிச்சையினார்திருவெங்கையன்னு
யலர்செய்துநிற்பதொன்றாயினுமாகவனங்கனெய்யு
மலர்செய்தநோய்மருந்தாமாயினல்குகமாந்தழையே. (கஙக)

இறைவிகையுறையேற்றமைபாங்கி யிறைவற்துணர்த்தல்.

இரைத்துப்பொருகங்கைவேணியர்வெங்கையிறைதழையென்
றுரைததுக்கொடுத்தலுமோடிவந்தேற்றதுயிர்த்துமுத்த
நிரைத்துக்கிடக்குமுலைமேலழுத்தினணேரிழைதா
னரைததுக்குடித்திலளன்பசெய்யாததுமவ்வளவே. (கருஉ)

பாங்கிதலைமகற்குக்குறியிடங்கூறல்.

அகலிலிருக்குஞ்சுடரெனவெங்கையகத்திருக்கும்
புகலிலிருककும்பொருளனையார்தம்பொருப்பருகே
யிகலிலிருக்குங்கதிரவேலிறைவவிரவுகடும்
பகலிலிருக்கும்பொழில்பகல்யாங்கள்பயிலிடமே. (கருரு)

பாங்கி குறியிடத்திறைவியைக்கொண்டுசேறல்.

புணர்பூத்தவார்முலையாய்மலர்தாங்கொய்யப்போதுவமந்
தணாபூத்தசொன்மலர்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பி
லிணர்பூத்தகட்கவர்வண்டிசைகூருமிளங்கொடிப்பெண்
டுணர்பூத்தகொம்பர்க்கொழுநனொடாடியசோலையிலே. (கருச)

குறியிடத்துய்த்துநீங்கல்.

மானேநின்கண்ணிகல்பெற்றுளவாவிமருவலனை
யானேயளியினம்பின்றொடர்ந்தார்ப்பக்கொண்டிங்குறுவே
னனேறுடையர்திருவெங்கைவாணரருண்முருகன்
றனேமுறுமயிலாடல்கண்டேநிற்கத்தண்பொழிற்கே. (கருரு)

இறையோனிடத்தெதிர்ப்படுதல்.

இயலோடுமல்குந்திருவெங்கைவாணரிமையவெற்பிற்
கயலோடும்வள்ளைக்கொடியோடுமோர்பைங்கமுகணங்கும்
புயலோடுநல்லிளநீரோடுநின்றுபுடைபெயருஞ்
செயலோடுநிற்பவிங்கின்றுகண்டேனொருதீங்கரும்பே. (கருசு)

புணர்ச்சியின் மகிழ்தல்.

மற்றின்பமுண்டென்பதன்றுலிவடரவந்தவின்பஞ்
சிற்றின்பமென்பதுதென்வெங்கைவாணர்திருநடன
முற்றின்பஞ்செய்யுஞ்சிதாகாசந்தன்னையுணர்வுடைமை
பெற்றின்பமெய்தினர்சொல்வர்சிற்றம்பலப்பேர்புனைந்தே. ()

புகழ்தல்.

வெங்கைப்பழமலையெம்மானுழையும்விளங்குமவன்
பங்கைப்பெறுமுமைசெங்காவியுமவள்பாலனொரு
செங்கைக்கதிர்வடிவேலுந்தரிப்பதுசெப்பிலிந்த
கொங்கைக்குடமுடையாள்விழிகாட்டுங்குறிப்பதுவே. (கஙஅ)

தலைமகளைத்தலைமகன்விடுத்தல்.

நீயாவிவந்தளித்தாய்தமியேற்குநிலாமலினிப்
போயாவிநல்கிநிற்காணுதலமரும்பூவையர்க்கு
மாயாவினோதர்திருவெங்கைவாணர்வரையினெதிர்
கூயாவிமென்மலர்கொய்துநின்றுகெகோமளமே. (கஙக)

பாங்கி தலைவியைச்சார்ந்துகையுறைகாட்டல்.

நஞ்சமமுதுசெய்வெங்கைபுரேசர்நன்னுடனையா
யஞ்சமுறவளியெல்லாமடக்கியமுதவொளி
விஞ்சுமதிகண்டிதழ்மூடியோகம்விளைத்ததனாற்
கஞ்சமிதுமுகசாரூபம்பெற்றதுகைக்கொள்கவே. (கசா0)

தலைவியைப்பாங்கிற்கூட்டல்.

கங்கைவிழியுமுகமுஞ்செவ்வாயுங்கரந்துமைக்குச்
செங்கயலுஞ்செங்கமலமுமாம்பலுஞ்செப்புமவர்
வெங்கையனையவிலங்கிலைவேற்கண்விளங்கிழையாய்
மங்கையரையடைந்தம்மனையாடுகவந்தருளே. (கசாக)

நீங்கித்தலைவற்றோய்ப்படைதாற்றல்.

பிறவாவடிவன்றிருவெங்கைமேவும்பிரானொடுபோ
யுறவாருயிருறவேயாகுஞ்சதிதியைபொப்பவின்று
குறவாணர்தங்கண்மடமாதைநின்னொடுகூட்டுமெனை
மறவாதிருமன்னவாவிதுவேநல்வரமெனக்கே. (கசஉ)

உலகியன்மேம்பட விருந்துவிலக்கல்.

மாயற்கரியர்திருவெங்கைவாணர்மணிவரைமே
லீயற்பொரியுங்குறும்பூழ்க்குழம்புடனேனமெல்லூன்
றீயற்கறியுந்தினைமூரலுமெஞ்சிறுகுடில்வாய்
நேயத்திவண்மிசைந்தேகிலென்னுகுநெடுந்தகையே. (கசரு)

விருந்திறைவிரும்பல்.

நானக்களபமுலையீனொக்குநவில்வதென்னீர்,
வானததவர்தொழுதேத்துறுஞ்சீவெங்கைவாணர்க்குங்கள்
கானகக்குறவரிறைமகன்றான்முனங்கல்லையிற்பெய்
யேனததசைக்கறியன்றோமிகவுமினியதுவே. (கசச)

பகற்குறி.

கிழவோன்பிரிந்துழிக்கிழத்திமாலையம்
பொழுதுகண்டிரங்கல்.

நந்தாமதுகைப்பழமலையார்வெங்கைநாடனையாய்
வந்தாவியம்புயம்வாட்டுமென்னாளிலம்மாலையன்று
சிந்தாகுலமுறவேதனித்தாரைச்செறுக்குமதன்
செந்தாமரையைமலர்த்துமிம்மாலைச்சிறுபொழுதே. (கசரு)

பாங்கிபுலம்பல்.

அருந்தாவிடமுமருந்தியவ்வானவராருயிரைத்
தருந்தாருவெங்கையிலெவ்வகையானுந்தனைத்தப்பியே
யிருந்தாலுமாவிகவர்வான்மதிப்பிள்ளையீன்றுவைகுகும்
பெருந்தாபமாலைக்கிவளென்கொலோபிழைசெய்ததுவே. ()

தலைவனிடத்தலைவிவருந்தல்.

கருமுன்படுந்துயர்தீர்ப்பார்நற்கட்செவிக்கங்கணவீ
ரிருமுன்கரமுடையார்வெங்கைவாணரிமையவெற்பி
லுருமுன்மணியும்புனைபூந்துகிலுங்கொண்டாயவெள்ளம்
வருமுன்வந்தாரிலையேயனைகோலநம்மன்னவரே. (கசஎ)

தலைவியைப்பாங்கிநழறல்.

புணர்ந்தாருள்வெங்கைபுரநாதர்பாகம்புணர்ந்தநறு
மணந்தாழ்குழலுமைமங்கையல்லாமன்மகிழ்நர்தமைத
தணந்தாரமைகிலர்நீதரியாமற்றளர்ந்தனையேற
பணந்தாழகலல்குலாய்நகுவார்நினைப்பார்த்தவரே. (கசஅ)

தலைவிமுன்னிலைப்புறமொழிமொழிதல்.

உரையாதமுன்னமுணாவார்தமக்கன்றியுற்றதன்னோய்
வரையாமலுள்ளவெல்லாமுணாத்தாலுமதிதுமனங்
கரையாதவர்கட்குரைப்பதில்வெங்கைக்கடவுளுண்ட
திரையாலமுண்டுயிர்நீததாலுநன்றுதெரிந்தவர்க்கே. (கசகூ)

பாங்கியோடு பகர்தல்.

வன்பந்தகனையழைக்குநஞ்சுணின்மறைப்பவர்போன்
முன்பந்தனையிலர்வெங்கையின்மேவிமுயங்குறுபே
ரின்பந்தருமவரவ்வின்பமூடுறவின்றுபிரி
துன்பங்கலந்தளித்தாரறிந்தேனிலைத்தூமொழியே. (கரு0)

பாங்கியச்சுறுத்தல்.

சுனைக்காவியன்னவிழிநீபுனத்திற்சுகங்கடியா
துனைக்காதல்செய்தவர்தம்பொருட்டாகவுலைதல்கண்டு
வினைக்காடெறியுமழுவார்திருவெங்கைவெற்பிலன்னை
தினைக்காவன்மற்றொருவர்க்களித்தாலென்னைசெய்குவையே.

நீங்கற்கருமைதலைவிநினைந்திரங்கல்.

தம்மாவியுந்தந்தலைவரும்வேறுதருமவரே
யம்மாவுலகிற்பிரிந்திருப்பாரளிமூசுமதக்
கம்மாவுரியாதிருவெங்கைவாணர்கனகவெற்பி
லெம்மாவியேயவரொன்றுற்பிரிகுவதெவ்வண்ணமே. (௧௫௨)

தலைவிக்கவன்வரல்பாங்கிசாற்றல்.

கடிக்குங்கரும்புமதவேள்சிலையவன்கைப்பகழி
முடிக்குங்கடிமலராமினிக்கேள்வெம்முயலகன்மே
னடிக்குங்கமலபதத்தார்திருவெங்கைநாடனையாய்
வடிக்குஞ்சுடரிலைவேலன்பர்தோன்மணிக்குரலே. (௧௫௩)

சிறைப்புறமாகச்செறிப்பறிவுறுத்தல்.

தழலாற்கடியவளியேநறுமென்றழைகள்கொய்யக்
கழலார்ப்புறுமென்பதத்தார்புனத்தினுங்காவகத்துஞ்
சுழலாத்திரியுங்கிளிகாளினிவெங்கைச்சோதிவெற்பி
னிழலாற்பொலிந்தவிளம்பொழிற்கேயிருநெஞ்சுவந்தே. (௧௫௪)

முன்னிலைப்புறமொழிமொழிந்தறிவுறுத்தல்.

தொண்டாவெமையுடையான்வெங்கைசூழிளஞ்சோலையிற்பூத
தண்டாதளவுமளிகாளுமக்குத்தகாதுகண்டீர்
கண்டானினைந்துபின்காணாதபோதெங்களைமறக்கும்
வண்டாரிறைவரொடுகூடியெம்மைமறப்பதுவே. (௧௫௫)

முன்னின்றுணர்த்தல்.

நனைகாத்தபூமடவார்விழியாகநயந்தருள்ங்
கனைகாத்தபாகர்தம்வெங்கையிலேவண்டுகாவிமலர்ச்
சுனைகாத்தவெற்பெமர்வேலண்ணலேயிச்சுகங்கடிந்து,
தினைகாத்தவெம்மைத்துயர்புகக்காப்பர்செறித்தினியே. ()

---

(௧௫௪) தழல் - கவண். [illegible]

முன்னின்றுணர்த்தியோம்படைசாற்றல்.

அந்திப்பொழுதிற்பெடைதாமரையுளகப்படநோழ்
புந்திச்சுரும்புகதிர்வருங்காறும்புறந்திரியு
நந்திக்கொடிவலங்கொண்டோன்றிருவெங்கைநாட்டிறைவ
சிந்தித்தெமைமறவாதிருநீநின்றிருவுளத்தே. (கரூஎ)

கிழவோன் றஞ்சம்பெறுதுநெஞ்சோடுகிளத்தல்.

தூற்றிக்கடிமலர்ப்பைந்தேன்கவர்ந்துசுரும்பினங்க
ளேற்றிக்குவடுறவைத்தாங்கிதணினிருந்தவரை
நீற்றிற்றிகழ்வடிவார்வெங்கைவாணர்நெடுஞ்சிலம்பிற்
போற்றிக்குறவர்வைத்தான்மனமேயென்புரிகுவமே. (கரூஅ)

பகற்குறியிடையீடு.

இறைவனைப்பாங்கிதறிவரல்விலக்கல்.

கானக்குறவர்திருவெங்கைவாணர்கனகவெற்பி
லேனக்குரலரிவான்குறித்தாரன்னையென்பவளு
மானக்கயல்விழியாள்குரலீரவருவதுபோற்
றேனக்கலர்தொடையாய்வருவாளித்தினைப்புனத்தே. (கரூக)

இறைவியைக்குறிவரல்விலக்கல்.

மாடுண்டவீரப்பிறையார்தென்வெங்கைவரையினிலுன்
சேடுண்டகொங்கைப்பசலைகண்டேதினைக்காப்பயிர்த்துத்
தோடுண்டகாதுடையாயன்னைதானுந்துணிந்திலளீ
யோடுண்டகூழெனவேமறுகாநிற்குமுள்ளமுமே. (கரூ0)

இறைமகளாடிடநோக்கியழுங்கல்.

நீடுந்தினையிற்கிளிநோக்குதலெனநின்றுநம்மோ
டாடுந்தலைவர்வரவேக்கிதணுமவருடனே
கூடுந்தொழின்மறைக்குஞ்சுனையோடலர்கொய்யுமலர்க்
காடும்பிரிவுறச்செய்வதென்னோவெங்கைக்கண்ணுதலே. ()

பாடிகி யாடிடம்விடுத்துக்கொண்டகறல்.

வயிரோசனனுக்குலகீந்தவர்வெங்கைமன்னனுக்குப்
பயிரோடுறவறநீததாளென்றெண்ணிப்பழுதுரையல்
செயிரோசிறி துமிலாக்கிளிகாடன்சிறுகுடிலுக்
குயிரோடாரிவைநடந்துசென்றாளென்றுரைமின்களே. (௧௬௨)

பின்னு ணேடுந்தகைதுறிவயினீடுசென்றிரங்கல்.

தன்னோடிருந்தபொழுதிளஞ்சோலைசெய்தன்மைகண்டேற்
கன்னோசனியிருந்தாற்செய்யுமாறுமறிவிக்கவோ
மின்னோவெனநின்றவிர்சடையார்திருவெங்கைவெற்பி
லென்னோவறிந்தருள்செய்வான்வராமலிருந்ததுவே. (௧௬௩)

வறுங்களநாடிமறுகல்.

பெறுங்களங்சமுடையாரடியவர்பிள்ளைதனை
யறுங்களமென்னுமொருவெங்கைவாணரணிவரைமே
னறுங்களவன்னகுழனீங்கமங்கலநாணிழந்த
வறுங்களமென்னவிருந்ததந்தோவிம்மணியிதனே. (௧௬௪)

துறுந்தோடி வாழழர்நோக்கிமதிமயங்கல்.

அறத்தாறுடையர்நுகர்பெரும்போகமறமறியா
மறத்தாறுடையர்விரும்புதல்போலும்வளர்சடையின்
புறத்தாறுடையர்திருவெங்கைவாணர்பொருப்படைந்த
குறத்தாறுடையர்மடமாதைமேவக்குறிப்பதுவே. (௧௬௫)

இரவுக்குறி.

இறையோனிருட்துறிவேண்டல்.

பொருந்தாரரணம்பொடிததோர்பவப்பிணிபோக்குதற்கு
மருந்தாமிறைவர்திருவெங்கைவாணர்வரையனையீர்
திருந்தார்கலியிற்புகுந்துநன்மீன்வரச்செய்துமக்கு
விருந்தாகவைததகன்றானிளியேனையவ்வெய்யவனே. (௧௬௬)

---

(௧௬௨) வைரோசனன் - வாணாசுரன்.

பாங்கிநெறியினதருமைகூறல்.

அங்கமுழுவணியானேன்றென்வெங்கையரனருண்மா
தங்கமுழுமதயானையன்றூடகற்சாடுமொரு
சிங்கமுழுவரியன்றெனவேழமுஞ்சீயமுஞ்சேர்
துங்கமுழுவனமெவ்வாறிருள்வரச்சொல்லுவதே. (கசுஎ)

இறையோனெறியினதெளிமைகூறல்.

பங்கந்தனக்கிலன்வெங்கையிலேதும்பணைமுலைமா
தங்கந்தனக்குமம்மாதங்கபாரந்தரிக்குமிடைச்
சிங்கந்தனக்குந்தளர்வதல்லாமற்சினவிலங்கின்
சங்கந்தனக்கொருநானேதளர்குவன்றுழ்குழலே. (கசுஅ)

பாங்கி யவனுட்டணியியல்வினாதல்.

போதேதுகொய்வரிழையேதணிவர்பொழில்விளையாட்
டேதேதுசெய்வர்புனலேதுதோய்வரெமைத்துதிப்பிற்
றீதேதுமில்லையெனும்வெங்கைவாணர்செழுஞ்சிலம்ப
சூதேதெனுமுலையாருங்கணுட்டியற்சொல்லுகவே. (கசுக)

கிழவோனவனுட்டணியியல்வினாதல்.

என்னுட்டணியியலென்னுயினென்னுனக்கென்றனக்குப்
பொன்னுட்டணியியலெல்லாங்கவர்ந்துபுகழ்மலிந்த
சொன்னுட்டணியியல்வெங்கைபுரேசாசுடர்க்கிரிசூழ்
நின்னுட்டணியியலெல்லாமுரைத்தருணேரிழையே. (கஎ0)

அவற்றுத் தன்னுட்டணியியல்பாங்கிசாற்றல்.

பிறைக்கோலஞ்செய்யுநுதற்சூட்டணிகுவர்பெய்வளையா
விறைக்கோலஞ்செய்வர்சுனையாடுவரவ்விரதிதனைச்
சிறைக்கோலஞ்செய்யும்விழியார்தம்வெங்கைச்சிலம்பமத [ரே.
னறைக்கோலஞ் செய்ய நறைக்கோலஞ்செய்வனொன்னுட்டவ

இறைவிக்கிறையோன்துறையறிவுறுத்தல்.

வன்மானுமென்முலைச்சேயரிவாட்கண்மடந்தைநல்லாய்
வின்மான்மதிக்கையரவிந்தம்வாடவவ்வேள்விசரு
நன்மான்கரசுசர்தம்வெங்கையிலேயிற்றைநாளிரவி
னின்மான்மதிமுகங்காண்பான்விரும்புநெடுந்தகையே. (௧௭௨)

நோதிறைவிநெஞ்சோடுகிளத்தல்.

ஒலியாலசையச்சருகெழத்தோகையுடன்குதிப்பப்
புலியாவெனவெழக்குஞ்சரமோடப்புளிநரெல்லா
மெலியாவிரையும்வனததேயிறைதிருவெங்கைவெற்பர்
மலியாரிருள்வரநெஞ்சமெவ்வாறுவலிப்பதுவே. (௧௭௩)

நேரிழைபாங்கியோடுநேர்ந்துரைத்தல்.

மின்னோடுவந்தவிரிசடையோன்றிருவெங்கைவெற்பின்
மன்னோடுநீயிருள்வந்தேகெனச்சொன்மடந்தைநல்லா
யென்னோடுகூடியிருப்பதுபோலவிருந்துமன
முன்னோடுகூடினினியேதுநானிங்குரைப்பதுவே. (௧௭௪)

நேர்ந்தமைபாங்கிநெடுந்தகைக்குரைத்தல்.

கொலையைக்குறித்தவிலைவேலவநின்குறிப்பிசைய
முலையைப்புணர்மென்கொடியிடையாடன்முரணுமனச்
சிலையைக் கரைத்துவந் தேனொருநான்வெங்கைச்செல்வரைப்
மலையைக்குழைக்கவும்வல்லேனினியிந்தமாநிலத்தே. [போன்

துறியிடைநிறீஇத்தாய்துயிலறிதல்.

விந்தாசலமுனிமாதவன்போற்றரன்வெங்கைவெற்பிற்
சந்தாடவிகண்முறித்தெறிவேலொடுதண்புனத்தில்
வந்தாகுலநமக்காக்கியவாரணம்வந்துற்றதோ
நந்தாவனத்திற்பறவையெல்லாமுரல்கின்றவே. (௧௭௫)

---

(௧௭௫) வேல் - ஆயுதம்; மூங்கில்.

இறைவிக்கிறைவன்வரவறிவுறுத்தல்.

மேனைக்குரியமருமகனுர் திருவெங்கைவெற்பின்
மானைக்கடந்துசெவியளவோடுமெதர்விழியா
யானைக்கரியுமரிக்குச்சரபமுமாகியிந்தக்
கானைக்கடந்துவந்தாருயிர்போலுநங்காவலரே. (௧௭௭)

அவட்கொண்டுசேறல்.

முருந்தாநகையுமைபங்காளர்வெங்கைமுதுகிரிமே
லிருந்தாமரைகண்மறுத்தவிப்போதிலிதழ்திறந்து
விருந்தாமளிகட்கினிதூட்டுமெல்லிகைமென்மலர்கொய்
தருந்தாரணிகுவனில்லாதெழுந்தருளாரணங்கே. (௧௭௮)

துறியுய்த்தகறல்.

காதாரமுதம்பெறவேண்டியன்றொருகாரிகைபாற்
றூதாய்நடந்ததிருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
போதார்மலர்மல்லிகையோடுமுல்லையும்போய்க்கொணர்வேன்
பாதாரவிந்தம்வருந்தாதிவணிற்கபைங்கொடியே. (௧௭௯)

வண்டுறைதாரோன்வந்தெதிர்ப்படுதல்.

தாட்டாமரையென்றலைக்கணிவோன்வெங்கைத்தண்சிலம்பிற்
றீட்டாவொருநடையோவியம்போலுந்திருவுருவீ
ராட்டானெனுங்கதிரேடாங்கதவடைத்தாங்கதன்மேற்
பூட்டாமளியுறப்பூட்டிற்றன்றோவுங்கள்பூவகமே. (௧௮0)

பெருமகளாற்றினதருமைநினைந்திரங்கல்.

விண்டெரியாதுமுகிலான்முகில்பொழிவெள்ளத்திறன்
மண்டெரியாதெவ்வகையடைந்தாயன்பமாறன்வயற்
கண்டெரியாவிருளிற்போமருமைகருதியன்றோ
பண்டெரியாயொளிர்வெங்கைப்பிரான்பதம்பாலித்ததே. ()

---

(௧௮௧) மாறன் - இளையான்குடிமாறநாயனுர்.

புரவலன்றேற்றல்.

முன்காட்டுபெந்தமும்வீடுமுள்ளோன்வெங்கைமொய்வரைசூழ்
கொன்காட்டிலுன்குழல்போலேயிருண்டவிக்கூரிருள்வாய்
பொன்காட்டுநல்லெழிலுன்னிடைபோலப்புயனுடங்கு
மின்காட்டிவந்ததிங்குன்னூர்வழியைவிழியினுககே. (கஅஉ)

புணர்தல்.

ஓர்போதெனும்பிறைவேணியிற்சூடுமொருவர்வெங்கைத்
தோபோலகன்றமணியல்குலாயிருசெய்யவிள
நீர்போலமைந்தின்பமேதிரண்டாங்குறுநின்முலைக்கண்
மாபோடழுந்தத்தழுவவென்னுன்செய்தமாதவமே. (கஅ௩)

புகழ்தல்.

பெண்காட்டியவொருபங்குடையாருதிர்பிட்டினுக்கா
மண்காட்டியபொன்முடியார்திருவெங்கைவாணர்வெற்பிற்
றண்காட்டியமலர்க்கோதாய்குரும்பைகடாமொருமுக்
கண்காட்டுமொயினுமொவ்வாநினதொருகண்முலையே. (கஅ௪)

இறைமகளிறைவனைக்குறிவரல்விலக்கல்.

அரவெளிதோவவ்வனமெளிதோவன்றியாற்றின்மடுக்
கரவெளிதோநந்திருவெங்கைவாணர்களமருட்டு
மிரவெளிதோவிவையெல்லாங்கடந்திங்கெனையளிப்ப
வரவெளிதோவென்னுயிர்க்கரணுகியமன்னவனே. (கஅ௫)

அவ னிறைவியையில்வயின்விடுத்தல்.

வலம்பொலிவீரமழுவாளன்வெங்கைமணிவரைமே
னலம்பொலிவாணுதல்வேற்கணல்லாயுன்னடைவிரும்பி
யலம்பொலியோடுதொடரோதிமமிலையஞ்சலைதாட்
சிலம்பொலியாமற்பரிகரித்தேகுன்றிருமனைக்கே. (கஅ௬)

இறைவியை யெய்திப்பாங்கிகையுறைகாட்டல்.

முட்டுப்படாத திருவாளன்வெங்கைமுளரிமுகை
நட்டுப்படாதவிளமுலையாயுன்னகையுடனே
மட்டுப்படாமலிகலுந்தளவின்றுமட்டுப்பட்டுக்
கட்டுப்படாமலென்கைக்கேவந்துற்றதுகண்டருளே. (கஅஎ)

இற்கொண்டேகல்.

சூடுந்துளபமணிநீலவெற்புந்தொடர்ந்துமுன
நாடுந்திருவடியெம்மான்றிருவெங்கைநாடனையா
யாடுங்கலாபமயில்போலுறங்குநம்மன்னையினாற்
றேடும்பொருளல்லமோசெல்லுவோநந்திருமனைக்கே. (கஅஅ)

பிற்சென்றிறைவனைவரவுவிலக்கல்.

சம்மேற்பணிபுனைவெங்கைபுரேசரைச்சார்கிலர்போற்
கைம்மேற்பொருடெரியாவிருள்வாய்வெங்கரியுடனே
தெம்மேற்புலிதிரியுங்காட்டினீயிச்சிறுவழிவந்
தெம்மேற்பழிசுமத்தாதகல்வாயெம்மிறைபவனே. (கஅகூ)

பெருமகன்மயங்கல்.

ஆய்வாரளவினளவாகும்வெங்கையமலாவெற்பிற்
றேய்வானுடங்கிடையாயறிந்தாரைச்செலவிடுப்போர்
போய்வாவென்பாரிவ்வுலகினிற்போவெனவேமுடித்து
நீவாவென்றாயிலைகண்ணோட்டமில்லைகொனின்றனககே. ()

தோழிதலைமகடுயர்கிளந்துவிடுத்தல்.

வம்புகுறித்துவருமாரளியினமல்லிகைப்பூங்
கம்புகுறிக்குமபொழுதில்வெங்கேசரைகைதொழுது
நம்புகுறிக்கண்வருமண்ணலேநின்னகரினிற்போயக்
கொம்புகுறித்துவரக்காட்டொலியையெங்கொம்பினுக்கே. ()

திருமகட்புணர்ந்தவன்சேறல்.

முப்போதினுமந்தணர்தொழுதேத்துறுமுத்தலைவே
லப்போதகன்றிருவெங்கையன்னாளல்குற்காடரவ
மொப்போதெனவொண்மணிவிளக்கேற்றியுதவிசெய்யுஞ்
செப்போதிளமுலையாய்செல்லுவேனென்றிருநகர்க்கே. (கக௨)

இரவுக்குறியிடையீடு.

இறைவிக்கிதுளையிறைவரவுணர்த்தல்.

வள்ளலம்பாகுமரியாளன்வெங்கைமணிவரைமேல்
விள்ளலம்பானல்விழியாய் துணைபுணர்மென்சிறக
ருள்ளலம்பாது துயில்கூர்தருதலொழிந்தெழுந்து
புள்ளலம்பாநின்றதென்னோநமதிளம்பூம்பொழிற்கே. (கக௩)

தான்துறிமருண்டமைதலைவியவட்குணர்த்தல்.

கானலைவேனின்முதிர்வாலெதிருறக்கண்டுமெறி
மானலைரெனவோடுதல்போல்வெங்கைவாணர்வெற்பிற்
றேனலைவாதொடையார்குறியாமெனச்சென்றுநைந்தேன்
பானலைவென்றகண்ணாய்குறிவேறுறப்பைம்பொழிற்கே. ()

பாங்கிதலைவன்றீங்கெடுத்தியம்பல்.

மறிக்கும்புலனுடையன்பர்தம்பாவமரமுறியத்
தறிக்குங்கனன்மழுவெங்கைபுரேசர்தடஞ்சிலம்பில்
வெறிக்குங்குமமுலைமெல்லியலாயிந்தமேதினியோ
குறிக்குங்குறிசெய்வரோநமையாளக்குறித்தவரே. (கக௫)

புலந்தவன்போதல்.

மறந்தடுக்குஞ்செயல்வெங்கைபுரேசர்மறைவனத்தி
லறந்தழைக்குந்திருவாலயம்போலுலகாரிருளைப்
பிறந்தழித்தென்றுமொளியோடுலாவரும்பேரிருவர்
திறந்தடைக்கின்றதன்றோநெஞ்சமேநந்திருமனையே. (கக௬)

புலர்ந்தபின்வறுங்களந்தலைவிகண்டிரங்கல்.

பணஞ்செய்பொறியிளநாகாபரணர்பகைதடிந்து
நிணஞ்செய்சுடர்மழுவெங்கைபுரேசர்நெடுஞ்சிலம்பிற்
குணஞ்செய்கதிரிலைவேலன்பர்தாங்குளிர்மாலையிட்டு
மணஞ்செய்தனரெனவோதழைந்தாய்மலர்மாதவியே. (கூ௭)

தலைமகள்பாங்கியோடுரைத்தல்.

நல்லார்தொடர்பிளங்காய்முதிர்வாமெனநாடுரைப்ப
வல்லார்மணிமிடற்றெம்மான்றிருவெங்கையாதிவெற்பின்
மல்லார்திணிபுயத்தன்பர்நம்பான்முனம்வைத்தநட்பு
வில்லார்சிறுமென்றளிர்முற்றலாகிவிளைந்ததுவே. (கூ௮)

தலைமகளவலம்பாங்கிதணித்தல்.

தீங்கையொன்றானுமுறுகிலர்போற்றுந்திருவடியான்
காங்கையன்றாதைதன்வெங்கையிலேபைங்கனகநிறக்
கோங்கைவென்றோங்குமுலையாய்நம்மன்பர்குறிபிழையார்
வேங்கையென்றாயினும்பூத்ததுண்டோமுல்லைமென்மலரே. ()

இறைவன்மேற்பாங்கிதுறிபிழைப்பேற்றல்.

பொருவோவிலர்திருவெங்கையிலேமுன்புனத்திலெமை
யுருவோடுயிரமுதென்றுபொய்கூறியுழன்றவரே
வெருவோமிரவும்பழியுமும்மூர்க்குவினவிவழி
வருவோம்வரினுமெமைநோக்குறீரெனவந்திலமே. (௨00)

இறைவிமேலிறைவன்துறிபிழைப்பேற்றல்.

நறவேயிதழியுங்கங்கையும்பாம்புநகைமதியு
முறவேயணியுமணிமுடியார்வெங்கையூரனைய
புறவேயிளமயிலேயமுதேபசும்பொற்கொடியே
மறவேனுனையென்றுநீநினையாமன்மறப்பினுமே. (௨0௫)

தலைவிதுறிமருண்டமைபாங்கிதலைவற்துரைத்தல்.

ஈயாதவரைக்கண்டீவரெனச்செல்லிரவலாபோற்
போயாவியிற்சிறுமாங்கனிவீழப்புரவலனே
நீயாவியிற்செய்குறியெனவேசென்றுநிததர்வெங்கை
வீயாமலர்க்குழலாள்வறிதேநொந்துமீண்டனளே. (உ௦உ)

அவன்மொழிக்கோடுமைபாங்கியவட்கியம்பல்.

கள்ளெழுங்கொன்றையர்வெங்கையிலேமைக்கடலின்மதி
நள்ளெழுங்காலம்பெறவேகுறியிடநான்மருவி
யுள்ளெழுங்காமமருந்துபெறுமலுழன்றுசென்றேன
புள்ளெழுங்காலையென்றுரன்பர்தாமிளம்பூங்கொடியே. (உ௦௩)

என்பிழைப்பன்றென்றிறைவிநேர்தல்.

அஞ்சாமதற்றெறும்வெங்கைபுரேசரணிமிடற்றி
னஞ்சாமிருளிற்குறிபிழையாதொருநான்குறிததுத்
துஞ்சாதிருந்துந்துஞ்சுற்றுளெனவவர்தூற்றப்பட்டே
னெஞ்சாவமுதனையாயினிநானிதற்கென்செய்வதே. (உ௦௪)

தாய்துஞ்சாமை.

கயிற்றுனிகழரவம்போற்சகந்தனிற்கற்பனையாக்
குயிற்றுநிகழிறைவெங்கையிலேயெழுங்கூன்பிறையோ
ரெயிற்றுனிகழுமிளம்பேதையாமிவ்விரவுவந்து
துயிற்றுவனைதனைவெங்காலதூதர்துயிற்றுகவே. (உ௦௫)

நாய்துஞ்சாமை.

சுளைவாய்மடைதிறக்கும்பலவான்வயற்றேன்றுசெந்நெல்
விளைவாய்மலியுந்திருவெங்கைவாணர்தம்வெற்பிடைமா
தளைவாய்மடமயிலேதனிவேழந்தனையொருபுன்
வளைவான்றுமலிகுரைத்திங்குறுமன்மறித்ததுவே. (உ௦௬)

ஊர்துஞ்சாமை.

நீர்துஞ்சுஞ்செஞ்சடையாவெங்கைவாணர்நெடுஞ்சிலம்பில்
வாதுஞ்சுமென்முலைக்கோமளமேவந்துமால்வரைமேற்
கார்துஞ்சமாவினமெல்லாமுன்றுஞ்சக்கடலுந்துஞ்ச
ஊர்துஞ்சிலாததென்னோவிதுநான்செய்தவூழ்வினையே. (உ0எ)

காவலர்கடுத்தல்.

தேவாதிதேவர்திருவெங்கைவாணர்சிலம்பர்நமை
மேவாதவண்ணங்கதிர்வேன்மருட்டும்விழிமடவாய்
கூவாமறுகிற்றிரிகாவலர்கையிற்கொட்டுபறை
வாவாவெனநெய்தலம்பறைகூவுநம்வாய்தலுக்கே. (உ0அ)

நிலவுவெளிப்படுதல்.

ஒழுங்கியிருந்தசடையாளாவெங்கையொருவர்வெற்பிற்
புழுங்கியிருந்தமனத்தன்பர்தாம்வந்துபோமளவு
மழுங்கியிருந்துமிளிர்திங்களையொருவாளரவம்
விழுங்கியிருந்துவிடாதுகொலோதளிர்மெல்லியலே. (உ0கூ)

கூகைதுழறுதல்.

நாகாபரணர்திருவெங்கைநாயகர்நல்லடிக்கன்
பாகாதவனொனக்கூகூவென்றத்தியதிலிருந்து
நீகாவலரைவிலக்குகின்றாயுயிர்நீத்திலனேற்
கூகாய்நினதடல்காண்பேன்விடியிற்கொடிமுன்னமே. (உக0)

கோழிதுரற்காட்டுதல்.

வாய்மையெனினும்புலரியைக்கூறுதல்வாரணங்காள்
சேய்மையறுநங்கொழுநர்தங்கூட்டஞ்சிதைத்தெமக்குத்
தீமைபயந்தமையால்வெங்கைநாயகர்செய்தவறத்
தூய்மையுணர்ந்தவர்வாய்மையன்றாமெனச்சொல்லுவரே. ()

வரைதல்வேட்கை.

தலைமகளைப்பாங்கிபருவரல்வினவல்.

என்னிடத்துற்றகுறையுளவோநம்மையீன்றவன்னை
தன்னிடத்துற்றமுனிவோவுலகந்தருமிமைய
மின்னிடத்துற்றபழமலையாதிருவெங்கையன்னாய்
நின்னிடத்துற்றதென்னோவுரையாய்நின்னினைவினையே. ()

அருமறைசெவிலியறிந்தமைகூறல்.

வேலையிலேவருநஞ்சமுண்டார்திருவெங்கைவெற்பின்
மாலையிலேவண்டிசைபாடுமென்குழல்வாணுதலாய்
சோலையிலேநங்கொழுநர்வந்தேகதிர்தோன்றுசிறு
காலையிலேதருமாலையன்னோவன்னைகண்டனளே. (உகரு)

தலைமகன்வருந்தோழிற்கருமைசாற்றல்.

தாயுஞ்சுணங்கனுமூருமவெங்காவலுஞ்சந்திரனுந்
தீயுங்குடிஞையுஞ்சேவலுந்தப்புஞ்செயலெளிதோ
பாயுஞ்சினவிடையார்வெங்கைவாணர்பனிவரைமேற்
காயுங்கதிரிலைவேல்வீரர்நம்மைக்கருதினுமே. (உகச)

தலைமகனூர்க்குச்செலவோருப்படுதல்.

அறிவேயொருவடிவாமீசாவெங்கையிலன்னமன்னு
யெறிவேலிறைவர்தம்மூர்க்கேகியாங்கவரெண்ணமெல்லா
மறிவேமவரன்பிலாமைகண்டாலுரையாடலமாய்
மறிவேமறிந்தபினந்தகனூர்க்குவழிக்கொள்வமே. (உகரு)

பாங்கியிறைவனைப்பழித்தல்.

வன்பற்றவர்தொழும்வெங்கைபுரேசர்மணிவரைமே
னின்பற்றிலர்கைவிடுத்தாரிறையவர்நீயவர்மே
லன்பற்றிலையணங்கேசிறிதேனுமன்பற்றவரைப்
பின்பற்றுவருளரோவிதுதான்மிகப்பேதைமையே. (உகசு)

இறைவி யிறையோன்றன்னை நேர்ந்தியற்படமொழிதல்.

சுரும்புகளிக்கும்பொழில்வெங்கைவாணர்சுடர்க்கிரிமே
லரும்புகடுகெகுமுலையாயுலகுளவாவியெல்லாம்
விரும்புகொடைதந்தண்ணளிவேந்தர்நம்மைவெறுப்பவரோ
கரும்புகசப்பதுவாய்க்குறையேயிந்தக்காசினிக்கே. (உகஎ)

கனவுநலிபுரைத்தல்.

ஓடுஞ்செயல்செயுமாசைத்தலையையொடித்திருத்தல்
கூடும்படிசெயும்வெங்கைபுரேசர்குவட்டில்விழி
மூடும்பொழுதெதிர்தோன்றிநிற்பார்கண்முகிழ்திறந்தா
னீடும்புகழுடையாரெதிர்தோன்றிலர்நேரிழையே. (உகஅ)

கவினழிபுரைத்தல்.

ஈயார்பொருளுமிறையாக்கிணறுமெனத்துணைவர்
தோயாமுலைகணலமிழந்தேன்மதிசூடுமொரு
மாயாமயமலர்வெங்கைபுரேசர்மணிவரைமேல்
வேயாம்பணைபுரைமென்றோட்கருங்கண்விளங்கிழையே. ()

தன்றுயர்தலைவற்துணர்த்தல்வேண்டல்.

விழிக்கிடனாகுதுதலார்தம்வெங்கையில்வேந்தொடுபெண்
பழிக்கலையென்றொருவார்த்தையையாரும்பகர்ந்துமிகுஞ்
சுழிக்கிடனாகுந்திருப்பாற்கடலெனத்தோன்றுபுகழ்
மொழிக்கிடனாகுதுமென்பாரைக்கண்டிலமொய்குழலே. ()

துன்புறுபாங்கிநீசொல்லேனச்சொல்லல்.

பொறியாலயம்பொய்கைசூழ்வெங்கைவாணர்தம்பூங்கரத்தின்
மறியாமெனப்பிறழ்சேயரிவாட்கண்மடந்தைநல்லாய்
பிறியாதுன்னுள்ளத்திருப்பார்க்கயலவர்பேசுவதென்
னறியாதவர்தமக்கன்றோவொருவரறிவிப்பதே. (உஉக)

தலைமகளைப்பார்த்துற்றவச்சக்கிளவி.

கலராலறிவரியார்வெங்கைவாணர்கனகவெற்பிற்
பலராலணியும்புகழார்பிறப்பொன்றிற்பாவிமதன்
மலராலவருந்துயர்நீக்குவராயினுமண்ணுளர்வா
யலராலவருந்துயர்நீக்குகிற்பாரையறிந்திலமே. (உஉஉ)

ஆறுபார்த்துற்றவச்சக்கிளவி.

ஒருகோடுதம்மிற்குறைந்தநல்வாரணமொன்றுமன்றி
யிருகோடுவெந்துமிகுங்களிறேனுமிகன்மதமா
வருகோடுவெவ்வதரென்றாலும்வெங்கையமலர்சரு
முருகோடுறழும்வடிவாரிடைமனமுந்துறுமே. (உஉரு)

காமமிக்ககழிபடர்கிளவி.

மாமாயனுந்தொழும்வெங்கைபுரேசர்மணிவரைமேற்
பாமாமுனிவன்மலயானிலமொருபாலசைய
வேமாயர்வேய்ங்குழலாலூதமேனிவிறகிற்பற்றுங்
காமானலமவியாகடலேழுங்கவிப்பினுமே. (உஉச)

தன்னுட்கையாறெய்திடுகிளவி.

வம்புற்றனைவெண்மதியாலொடுங்கினைவண்டிழந்தா
யம்புற்றனைமிகுகண்முத்துகுத்தனையம்புயமே
நம்புற்றரவணியெம்மான்றிருவெங்கைநாட்டிறையை
வெம்புற்றனையெனைப்போலென்பதின்றுவெளிப்பட்டதே.()

நெறிவிலக்குவித்தல்.

நீரலைவேணியர்வெங்கையில்வாழுநெடுந்தகையைச்
சீரலைவாய்வருஞ்செவ்வேண்முருகனுஞ்சேறலருஞ்
சாரலைமேவுமொருபெருங்காட்டுத்தனிவழியில்
வாரலைநீயென்பவர்க்கேவருவனவண்புகழே. (உஉசு)

நறிவிலக்குவித்தல்.

பிளவுமதிச்செஞ்சடையாளர்வெங்கைப்பெருந்தகைதான
றளவுநகைகக்கருங்கண்மடவாய்விண்டலமுகட்டை
யளவுபொழிற்குறிவந்தாற்றுயிலபொழுதார்க்கும்புள்ளாற்
களவுவெளிப்படினெனனுய்முடியுநங்காரியமே. (உஉஎ)

வெறிவிலக்குவித்தல்.

மறிகொண்டவங்கையாவெங்கையிலேமென்மலர்ப்பொழில்வா
குறிகொண்டவனபாதருநோயென்றன்னைகுறித்திலளாய் [ய்க
நெறிகொண்டதெய்வமணங்கிற்றென்றேதன்னினைவழிந்து
வெறிகொண்டனண்மற்றொருவிதியோவிதுமெல்லியலே. ()

பிறவிலக்குவித்தல்.

அருங்கண்ணிவெண்மதிசூடும்பிரான்வெங்கையாவிமலர்க்
கருங்கண்ணிகங்கையின்மென்றுவியன்னங்கருதிவைத்த
பெருங்கண்ணியிற்புனற்காக்கைபட்டாங்குப்பிறர்மதின்
மருங்கண்ணிவந்தனனொன்பதுகேட்டின்னுமாய்ந்திலமே. ()

தூவரைவரைவேதிகொள்ளுவித்தல்.

பூண்கொண்ட மென்முலையாய்வெங்கைவாணாபொதியவெற்
லேண்கொண்டநங்கருததீன்றவர்க்கோதுமிசைவுபெறு [பி
நாண்கொண்டுநங்கற்பழிதனன்றோவன்றிநாணிழந்து
மாண்கொண்டவங்கற்புறுதனன்றோநம்மரபினுக்கே. (உ௩0)

வரைவுகடாதல்.

வினவியசெவிலிக்குமறைத்தமைவிளம்பல்.

வண்டுகலிக்குந்தொடையாயெம்மன்னையிம்மாதுதுயில்
விண்டுதரித்திலளென்கொலென்றுளரன்வெங்கைவெற்பிற்
பண்டுபுனதத்தில்வருமதவாரணம்பாய்கனவு
கண்டுபினைத்துயின்றுளிலையென்றுகரந்தனனே. (உ௩௪)

அலரறிவுறுத்தல்.

கோட்டுமலைவில்விறலாளர்வெங்கைக்குளிர்சிலம்பிற்
றீட்டுமிலைமலிவேலண்ணலேநின்றிருக்கரத்தால்
வேட்டுமகிழ்செய்யணங்கெனவேயிவண்மென்குழலிற்
சூட்டுமலர்கண்டுலகமெலாமலர்சூட்டியதே. (உ௩உ)

தாயறிவுணர்த்தல்.

நீர்பூத்தசெஞ்சடையார்வெங்கைவாணர்நெடுஞ்சிலம்பிற்
கார்பூத்தவண்மைமடங்கலன்னாயன்னைகாலமன்றி
யேர்பூத்தபைந்தளிர்மெல்லியலாமிவ்விளங்கொடிமேற்
பீர்பூத்ததென்னைகொலோவறியேனெனப்பேசினளே. (உ௩௩)

வெறியச்சுறுத்தல்.

அலைமேற்கிளர்பொறிவாழ்வெங்கைவாணரணிவரைமேற்
சிலைமேற்பயில்கைத்தலத்தையநீயெமைச்செய்துயர்க்குத்
தலைமேற்படுமெறிக்கோர்கான்முடக்குந்தகைமையென்னக்
கொலைமேற்பயிலுமெமர்வெறியாடல்குறித்தனரோ. (உ௩௪)

பிறர்வரைவுணர்த்தல்.

மகவானிறைஞ்சுந்திருவெங்கைவாணர்வரையணங்கின்
முகவாரிசமுமுலையுங்கண்டான்மிகுமோகமுறுஞ்
சகவாழ்வினரையுரைப்பதென்யான்மறைசாற்றுகின்ற
சுகவாமதேவருமின்றேவிடுவர்துறவினையே. (உ௩௫)

வரைவெதிர்வுணர்த்தல்.

கொன்னெறிவேற்குமரன்போலெமொதிர்கொண்டுதரு
நன்னெறியாற்பெறலாகவுந்தென்வெங்கைநாதர்வெற்ப
செந்நெறியாற்செல்பதிக்கோர்கொடுநெறிசெல்பவர்போன்
மின்னெறிவேற்கண்ணியைக்களவாற்பெறவேண்டினையே. ()

வரையுநாளுணர்த்தல்.

பணிவாய்விரிசடைப்பெம்மான்றென்வெங்கைப்பனிவரைமே
கணிவாய்மலர்ந்துமணநாளுரைப்பக்கடன்றரக்கிண் [ற்
கிணிவாய்மலரனையாண்மறிப்பாயிடுங்கீற்றெனவொண்
மணிவாய்புயத்தன்பவூர்கொண்டதால்வெண்மதியமுமே. ()

தலைமகளறிவறிவுறுத்தல்.

பிற்பழியாதுமிலராலசுந்தரர்பித்தவெனுஞ்
சொற்பழியாளர்திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
றற்பழியாகநின்றனபழிநாணித்தலைவவறக்
கற்பழியாதுமடமாதெனையுங்கரந்தனளே. (உ௩அ)

குறிபெயர்த்திடுதல்.

ஐயுற்றெமர்தெளிவானிருந்தார்நும்மடிச்சுவடு
கொய்யுற்றபூம்பொழிலூடுகண்டேமென்குழலுமையாண்
மெய்யுற்றவங்கணர்வெங்கையிலேகுறிவேறுகொண்டு
மையுற்றகண்ணியொடும்விளையாடுகமன்னவனே. (உ௩௧)

பகல்வருவானையிரவுவருகென்றல்.

நந்தேடவிழ்ந்துநறவூற்றிருக்குநளினமிசை
வந்தேறிமென்றுயில்கொள்வெங்கைவாணர்வரையின்மலர்க
கொநதேறுமென்குழலாண்முகவாவிக்குமுதமலர்ச்
செந்தேனிரவினல்லாற்கிடையாதென்னசெய்யினுமே. ()

இரவுவருவானைப்பகல்வருகென்றல்.

சேல்கொண்ட தண்பணைசூழ் வெங்கைவாணர்தஞ்சேய்திருக்
வேல்கொண்டகண்ணிளம்பெண்ணோடுகூடவிருப்பமுறு[கை
மால்கொண்டவெங்களிறன்னாய்மலர்மனைவாய்திறகுங்
கோல்கொண்டுவந்திலையேலரிதாலவட்கூடுதலே. (உ௪௧)

(உ௪௧) கோல் எனறது சூரியனை.

பகலினுமிரவினும்பயின்றுவருகென்றல்.

சொல்லும்பொருளுமெனநிறைவாரிளஞ்சூன்மிடற்ற
நெல்லுங்கரும்புநிறைவெங்கைவாணர்நெடுஞ்சிலம்ப
வில்லும்பிறையும்பணிவானுதற்றளிர்மெல்லியலை
யல்லும்பகலுமகலாதிவண்வந்தடைந்தருளே. (உசஉ)

பகலினுமிரவினுமகலிவணென்றல்.

பாவலர்பாடும்புகழ்வெங்கைவாணர்பனிவரைமேன்
மேவலராருயிருண்டமைவேலவவெம்பகலி
லேவலராயநெருங்குமின்றேன்வண்டெனவிரவிற்
காவலர்சூழ்ந்துதிரிவார்பொன்காத்தகடியெனவே. (உசங)

உரவோனுடுழருங்தலனு
மரபும்புகழும்வாய்மையுங்கூறல்.

துதியுந்தொடையும்புனைபுயத்தாய்மணஞ்சூழ்ந்திலையே
னதியும்பணியும்புனைவேணியர்வெங்கைநாட்டினின்
பதியுங்குலனுமரபுநல்வாய்மையும்பல்புகழு
மதியுங்களங்கமும்போலொழியாமன்மறுப்படுமே. (உசச)

ஆறுபார்த்துற்றவச்சங்கூறல்.

அரியும்பணியுந்திருவெங்கைவாணரடியரல்லார்
திரியும்பவநெறிபோன்றொழியாதிரைதேர்ந்துகொடு
வரியுங்கரியுஞ்செறியுஞ்சிறுவழிவாரலைநீ
புரியுங்கருங்குழலாட்பொருட்டாகப்புரவலனே. (உசரு)

ஆற்றத்தன்மையாற்றக்கூறல்.

அழுவாண்மொழிதளர்வாளையகோவென்றலம்வருவாள்
விழுவாள்புரண்டெழுவாள்வெங்கைவாணரைவேண்டியடி
தொழுவாளநங்கன்சொடியனென்பாளுயிர்சோர்ந்திடுவாண்
முழுவாள்விழிமடமாதெண்ணமன்பமுடித்தருளே. (உசசு)

காவன்மிகவுரைத்தல்.

ஆக்குறுங்காரணர்வெங்கைபுரேசரணிவரையாய்
தாக்குறுஞ்சீயமும்வேழமும்வேங்கையுந்தப்பிவந்து
மாக்குறுஞ்சோலையெம்மூர்புகுந்தாலுமனையருகு
காக்குறுங்காவலர்தம்மையெவ்வாறுகடப்பதுவே. (உசஎ)

காமமிகவுரைத்தல்.

தாள்வலிகொண்டுபெகடுந்துகாலன்றனைமருட்டு
மாள்வலிகொண்டவர்வெங்கைவெற்பாநின்னணியலர்கற்
றேள்வலிகொண்டுதவிர்ப்பினலாமற்றுயர்விளைக்கும்
வேள்வலிகொள்ளுந்துணையெங்கள்பேதைக்குவேறில்லையே.

கனவுநலிபுரைத்தல்.

மனவேயணியுந்திருவெங்கைவாணர்வரையணங்கு
சினவேலிறைவநின்றேளொடுகொங்கைதிளைக்கவருங்
கனவேயுயருந்துறக்கமென்பூணினைக்காண்பரிய
நனவேதுயரந்தருகின்றதீவெந்நரகென்பளே. (உசக)

கவினழிபுரைத்தல்.

கருவரையெங்கடிருவெங்கைவாணர்தங்கண்ணழித்த
வொருவரையன்னவெழிலுடையீரிங்குமதருளா
விருவரைபொன்னுமிருவேலைமுத்தமுமீன்றனவாற்
குருவரையன்னமென்றேளுடையாட்குக்குறையென்னையே.

ஒருவழித்தணைத்தல்.

தன்பதிக்ககற்சிதலைவன்சாற்றல்.

என்மனநல்விளம்பூங்கொடிபால்வைத்திளங்கொடிதன்
னன்மனமென்னொடுகொண்டேர்புகுந்திங்குநான்வருவேன்
வன்மனம்வந்துபுகாவீசர்வெங்கைமருவலர்போ
னின்மனமஞ்சலைசெங்கயல்வாட்கண்ணிரைவளையே. (உருக)

பாங்கிவிலக்கல்.

ஊனுருயிரினுயிர்போலவேயவ்வுயிரினுயிர்
தானுமொருவன்றிருவெங்கைவெற்பிலுன்றன்பதிக்குப்
போனுல்விரைந்துவருவாயலையன்பபோகலைநீ
யானுயிழைத்துயர்கண்டாவிகொண்டிங்கிருக்கிலனே. (உ௫உ)

தலைவனீங்கல்வேண்டல்.

நீர்புக்குவாழுநெடுமீனந்நீர்தனைநீங்கியுய்ந்தாற்
ரூர்புக்குவாழுமுலையாளையானுந்தணந்துய்குவேன்
மார்புக்குமாலையரவானவர்வெங்கைவாணர்வெற்பி
லூர்புக்குநான்வரவேண்டுமின்னேநின்னுளத்திசையே. (உ௫௩)

பாங்கிவிடுத்தல்.

கொந்தார்மலர்க்குழல்வெண்முத்தவாணகைக்கோமளத்தின்
சிந்தாகுலமுற்றுநீயறிவாயன்பதேமொழிக்கு
நந்தாமணிவிளக்கன்னுர்தம்வெங்கைநகரினிற்போய்
வந்தாரெனச்சென்றுநான்கூறநீசென்றுவந்தருளே. (உ௫௪)

பாங்கிதலைவிக்கவன்செலவுணர்த்தல்.

அம்மூலகாரணர்வெங்கைபுரேசரணிவரைமேற்
செம்மூரிவேலவர்நீயாரணங்கின்முன்செல்லுமுன
மெம்மூர்புகுந்துவருவலென்றேகினரேந்திழையாய்
நம்மூர்மருங்குறவிந்நேரம்வந்துநணுகுவரோ. (உ௫௫)

தலைவிநெஞ்சோடுபுலத்தல்.

விளித்தாருயிரையடிநீழல்வைப்பவர்வெங்கையிலே
யளித்தார்புனைகுழலாயகலேனென்றகந்தெளியத்
தெளித்தாரகன்றனரேலவர்வார்த்தைதெளிந்துமனங்
களித்தார்தமக்குளதோபிழைதானிந்தக்காசினிக்கே. (உ௫௬)

சென்றேனீடலிற் காமமிக்கதழிபடர்கிளவி.

பூளையணியுஞ்சடையாளர்வெங்கைபுரேசர்வெற்பிற்
பாளைமணங்கமழ்மாதிருப்பாளைனப்பச்சைமயிற்
காளையனையநங்காதலர்தாமலர்க்கால்வருந்த
நாளைவராமலிடம்போய்மறியுநன்னாகைகளே. (உருஎ)

தலைவியைப்பாங்கியாற்றுவித்தல்.

பொலம்புரிவார்சடையார்வெங்கைவாணர்பொருப்பணங்கே
கலம்புரிமேனியிற்குங்குமந்தோய்தண்களபமென்ன
நலம்புரிகாதலர்தம்பதிநோக்கிநடந்தவழி
வலம்புரிதோன்றுமடிப்பொடிபூசுகவந்தருளே. (உருஅ)

தலைவன்வந்தமைபாங்கியுணர்த்தல்.

மலையானைமாதுலனென்பார்தம்வெங்கைவரையிடைப்பூஞ்
சிலையானைவென்றவெழிலுடையார்நஞ்செழும்பதிக்குக்
கொலையானைமேற்பசும்பொன்னோடுவந்தனர்கோதைகமழ்
முலையானைமேற்பசும்பொன்னொழிவாய்மலர்மொய்குழலே. ()

பாங்கிதலைவனோடுநோந்துவினுதல்.

காரார்மணிமிடற்றெம்மான்றிருவெங்கைக்காரிகைதன்
பீரார்நுதலுமுடியாக்குழலும்பெருவிழியி
னீரார்நிறைகுடமுங்கண்ணுருமைநன்னீதியென்றோ
வாராதொழிந்தனைநின்கருத்தேதுசொன்மன்னவனே. (உசுஂ)

தலைவன்பாங்கியோடுநோந்துவினுதல்.

அலையாநிலையர்திருவெங்கைவாணரணிவரையீர்
கலையானிறைமதிவேய்ங்குழல்சோலைக்கருங்குயில்யாழ்
மலையானிலநல்லவோவல்லவோவம்மதனனெடுஞ்
சிலையானுமிழ்வதலரோவம்போவென்னசெப்புமினே. (உசுக)

தலைவியை யாற்றுவித்திருந்தவருமைசாற்றல்.

நீர்மல்குகண்ணும்வளைதீர்ந்தகையும்வெந்நெட்டுயிர்ப்பும்
பீரமல்குகொங்கையுமாய்ப்பின்னைவேறுபிழைப்பிலதா
யாமல்குசெஞ்சடையார்வெங்கைவாணரருளதனாற்
றூர்மல்குதோளண்ணலேபுரந்தேனின்றனியுயிரே. (உசுஉ)

வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதல்.

என்போருட்பிரிவுணர்த்தேந்திழைக்கென்றல்.

இடைநிலையாம்பொருளுண்டேன்முதனிலையெய்தறமுங்
கடைநிலையாமின்பமுமேவுமென்றனர்காதலொன்
றடைநிலையாம்பதத்தெம்மான்றிருவெங்கையாயிழைக்குத்
தொடைநிலைவார்குழற்பூங்கொடியேசென்றுசொல்லுகவே. ()

நீ ஈபோருட்பிரிவுரைநீயவட்கென்றல்.

என்னோடுசொல்லுகசெல்லாமையுண்டெனினீரமதி
தன்னோடுமல்குசடையாளர்வெங்கைத்தடஞ்சிலம்பிற்
பொன்னோடுசொல்லுகநீநின்செலவைப்பொருணினைந்து
முன்னோடுபின்னுமிழப்பான்கருதியமுன்னவனே. (உசுச)

நீடேனென்றவனீங்கல்.

மாணிக்கவாசகன்செந்தமிழ்மாலைமணக்குமுடி
வேணிக்கடவுளிடமாகிய திருவெங்கையன்னு
யாணிக்கனகமனையாள்செயலிங்கறிந்துசெல்வேன்
பாணிக்குமாறிருந்தாலெனைப்போலிலைப்பாவிகளே. (உசுரு)

பாங்கிதலைவிக்கவன்செலவுணர்த்தல்.

இருளாலயமன்னவார்குழலாய்நம்மிறைவரின்று
வெருளாலமுண்ட திருவெங்கைவாணர்தம்மெல்லடியை,
யருளாலலதெய்தலாகாதவாறெனவானைமிசைப்
பொருளாலலதுனையெய்தவொணாதென்றுபோயினரே. (உசுசு)

தலைவியிரங்கல்.

பொழியுமருளுடையார்வெங்கைவாணர்பொருப்பருவி
விழியுமெலிவும்பசப்பூர்முலையுமவ்வின்மதனு [illegible]
லழியுமனமுமறிந்திலராயினுமாவொருபெண்
பழியுநினைந்திலரோபொருண்மேற்சென்றபாதகரோ. (உசுஎ)

தலைவியைப்பாங்கிகொடுஞ்சொற்சொல்லல்.

அரியாரறிதற்கரியார்திருவெங்கையாயிழையாய்
பிரியார்பிரியப்படாரிலையோநின்பெருமணக்குக்
கரியார்பொருடரச்சென்றார்பொருட்டுக்கயன்மருட்டும்
வரியார்கண்ணீர்மல்கவென்னைகொலோநின்றுமாழ்குவதே. ()

தலைவிகொடுஞ்சொற்சொல்லல்.

நீடறிவாய்நின்றவெம்மான்றிருவெங்கைநேரிழையாய்
பீடறிவாய்நம்முயிரனையார்தம்பெரும்பணைநீர்
நாடறிவாய்பொருணச்சியிப்போதுநடந்தகொடுங்
காடறிவாய்துணிந்தாயுனைப்போலிலைக்கன்னெஞ்சரோ. (உசுக)

வருதுவர்மீண்டேனப்பாங்கிவலித்தல்.

வலையிற்படுகலைகண்டிளமான்பிணைமாழ்கிநிற்கு
நிலையிற்படர்வனஞ்சென்றநங்காதலர்நெஞ்சுருகிக்
கொலையிற்படுமழுவார்வெங்கைமாதுன்குளிர்தரள
மலையிற்படர்தனம்பீர்மீளமீண்டுவருகுவரோ. (உஎ0)

பருவங்கண்டுபெருமகள்புலம்பல்.

பூட்டாதவில்வளைத்தார்த்தாங்கிடித்துப்புயலெழுந்து
தீட்டாதவம்புபொழியுமிக்காலந்தெரிந்திலரோ
காட்டாதநன்னிலையார்வெங்கைவாணர்கனகவெற்பி
லீட்டாதபொன்னனையாயகன்றார்பொருளீட்டுதற்கே. (உஎக)

இதுளைவம்பென்றல்.

வெயிலேயெனமணிகண்டி தழ்கூம்பிவிரைக்குவளை
துயிலேபுரியுஞ்சுனைவெங்கைவாணர்சுடர்ககிரியின்
மயிலேயுளங்கவலேலி துதான்மழைவம்பொடுங்கிக்
குயிலேமருபருவத்தாற்பொழிதருங்கொண்டலன்றே. (உஎஉ)

இறைமகண்மறுத்தல்.

கொங்கைப்பசப்பெனக்கொன்றைகள்பூத்தகுருகொழிந்த
வங்கைத்தலமெனதுதோன்றியுந்தோன்றினவன்னவயல்
வெங்கைப்ப திபிற்பழமலைநா தர்மிடறெனவே
மங்கைப்பருவத்தணங்கேமுகிலெழும்வம்பலவே. (உஎங)

அவர் தூதாகிவந்தடைந்ததிப்போழுதேனத் துணைவிசாற்றல்.

இணர்வார்சடைமுடியார்வெங்கைவாணரிமையவெற்பிற்
புணர்வார்முலையிளமென்கொடியேநம்புலம்புறுநோ
யுணர்வார்பொருளொடும்வந்தாரொன்றோகையுறைததுமுகில்
வணர்வார்குழலெழில்வாங்குதல்வேண்டிமுன்வந்ததுவே. ()

தலைமகளாற்றல்.

பொருநாண்மதனையழிததேயிமையப்பொருப்பின்மணத்
திருநாளதிற்றரும்வெங்கைபுரேசர்செழுஞ்சிலம்பிற்
கருநாண்மலர்விழிமாதேயென்றுயினுங்காதலரீங்
கொருநாள்வருவரொன்றேநின்றதாவியுடலகத்தே. (உஎரு)

அவனவட்புலம்பல்.

ஓடுந்தடங்கண்மணற்கேணியாகவவ்வூற்றிறைக்கு
நீடும்புளினமுலையாக்குறைவுநிறைவுமின்றிச்
சூடும்பிறையர் திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
பாடுஞ்சுரும்பலர்மொய்குழறேம்பிப்பதைத்திடுமே. (உஎசு)

பாகனோடுசொல்லல்.

வார்கொண்டமென்முலையாளிடையேபொய்வருவலென்னுங
கார்கொண்டவென்னிடையில்லைபொய்யென்னக் கடுக்கைநறு
தார்கொண்டசெஞ்சடையாவெங்கைவாணர்தமதருளாற் [ந்
றேர்கொண்டசீர்வலவாவிரைந்தேகச்செலுத்துகவே. (உஎஎ)

மேகத்தோடுசொல்லல்.

சென்னிப்பிறையர் திருவெங்கைவாணர்செழுஞ்சிலம்பின்
மன்னிப்படருங்கொடிபோற்றழைந்துமலர்வதன்றெங்
கன்னிப்பசுங்கொடிவாடுங்கண்டீமெய்க்கருகிநின்று
மின்னிப்பொழியிலெனையன்றுபோய்க்கருமேகங்களே.(உஎஅ)

பாங்கி வலம்புரிகேட்டவன்வரவறிவுறுத்தல்.

தெண்ணீர்முடியர் திருவெங்கைவாணர்செழுஞ்சிலம்பிற்
புண்ணீரமுழுகுமிலைவேலிறைவர்பொற்றேரின்மிசைப்
பண்ணீரமொழியணங்கேகிளர்ந்தார்க்கும்பணிலமுன்றன்
கண்ணீர்வழியடைத்தற்குரித்தாகியகல்லெனவே. (உஎக)

வலம்புரிகிழத்திவாழ்த்தல்.

வேயின்கவின்புனைதோளுமைபங்கர்தம்வெங்கைகர்க்
கோயின்முனம்புகுஞ்சங்கெனவாழ்கநங்கொண்கர்சுரம்
போயின்றணைவலெனவோதியமொழிப்பொய்ம்மைபடா
வாயின்புகழ்திரண்டாலெனவார்க்கும்வலம்புரியே. (உஅ0)

தலைவன் வந்துழிப்பாங்கிநினைத்தமைவினவல்.

அம்மையிடத்தர் திருவெங்கைவாணரணிவரையெங்
கொம்மைமுலைத்தலமெல்லாம்பசலைகொளக்கொடுத்துச்
செம்மைமனத்திற்பொருள்விழைந்தார்தரச்சென்றவிடத்
தெம்மைநினைத்ததுண்டோவிலையோசொல்விறையவனே. ()

தலைவனினைத்தமைசேப்பல்.

புறந்தாழ்குழலுமைபங்காளர்வெங்கைபுரத்தரயன்
பறந்தாலுமென்னென்றிருக்கின்றவேணிப்பரமர்தமைத்
துறந்தார்மனமெனவெங்கொடுங்காட்டுச்சுரத்திடைநான்
மறந்தானினைத்தலுமுண்டுபொன்னேயுங்கள்வஞ்சியையே. ()

பாங்கி தலைவியையாற்றுவித்திருந்தமைகூறல்.

விண்மணிபொய்ப்பினும்பொய்யாநின்வாய்மைவிளம்பியெங்க
கண்மணியொத்ததசெவ்வேலிறைவாவுயிர்காத்தளிததே [ள்
ளெண்மணிகண்டத்தொருவெங்கைவாணருயர்சிலம்பிற்
பெண்மணியைப்பிறைவாணுதலீர்ங்குழற்பேதையையே. ()

களவியல் முற்றிற்று.

வரைவியல்.

வரைவுமலிவு.

காதலன்முலைவிலைவிடுத்தமைபாங்கி காதலிக்குணர்த்தல்.

மலைவிலையென்றநிலைவெங்கைவாணர்மணிவரைமே
லிலைவிலையிந்தமணிக்குமுலைக்குமென்றெண்ணியொரு
கொலைவிலைவென்றநுதன்மடவாய்நங்கொழுநர்முகிழ்
முலைவிலைநல்கினனாந்தலைநாகமுமுமணியே. (உ௮௪)

காதலிநற்றாயுள்ளமகிழ்ச்சியுள்ளல்.

நான்றசடிலத்திருவெங்கைநாயகர்நல்குமொரு
கான்றகுருதிக்குடர்மாலைவேலுடைக்காளையெழில்
போன்றவுருவத்திறைவர்மென்றோளிடுபூந்தொடைகண்
டீன்றபொழுதிற்பெரிதுவவாநிற்குமெம்மனையே. (உ௮௫)

(உ௮௩) விண்மணி - சூரியன்.

பாங்கி தமர்வரைவேதிர்ந்தமைதலைவிக் குணர்த்தல்.

புரவலரொக்குங்குடிவாழும்வெங்கைபுரத்தரிந்தீ
வரவலரொக்குமிடற்றார்தங்கையிளமான்விழியா
யிரவலரொக்குமிறையோன்முலைவிலையின்மொழியாற்
றரவலரொக்குமெதிர்புகுந்தார்க்குந்தடமுரசே. (உஅகூ)

தலைமக ளுவகையாற்றுளத்தொடுகிளத்தல்.

வில்லுங்கணையுமதவேளுமாயவிழித்தவொஞ்
சொல்லும்புனையுந்திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
கொல்லுந்துயரமுலைமேற்பசப்பினைக்கொண்டுநெஞ்சே
செல்லுஞ்செலவையுணர்த்தியதாமிச்செழுமுரசே. (உஅஎ)

தலைவனைப்பாங்கிவாழ்த்தல்.

கணத்தினிலங்குமதிப்பிள்ளையொன்றிளங்கட்செவியின்
பணத்தினுறங்குஞ்சடையாளர்வெங்கைப்பனிவரைமேற்
குணத்தினுயாந்தகொடியிடையாவிகொடுப்பதற்கா
மணத்தினலங்கல்புனையுநங்காதலர்வாழியவே. (உஅஅ)

தலைவி மணம்பொருட்டாகவணங்கைப்பராநிலைகாட்டல்.

நிலமாதணிநிகர்வெங்கையுளான்றருநீமுனமெங்
குலமாதினைமணஞ்செய்தாங்கெனையுங்கொழுநர்வந்து
நலமாமணம்புணர்ந்தால்விழவாற்றுவனுனெனவே
பலமாதருந்தொழும்பாவைசெவ்வேளைப்பரவுறுமே. (உஅகூ)

அதுகண்டோன்மகிழ்தல்.

மால்பற்றியபொழில்வெங்கைபுரீசர்மணிவரைமேற்
சேல்பற்றியவிழியாளுலகோர்முனஞ்செங்கையினுற்
கால்பற்றியம்மியின்மீதேயிருத்தல்கடைப்பிடித்து
வேல்பற்றியதெய்வகுளாமணியினைவேண்டுறுமே. (உகா)

(உஅகூ) இந்திவரம் - கருங்குவளை.

அறத்தொடுநிற்றல்.

கையறுதோழிகண்ணீர்துடைத்தல்.

கோலம்புனைதலிற்குற்றமின்றான்மலர்கொய்துவருங்
காலந்தவறிலபந்திடைததோல்வியுங்கண்டிலமா
லாலநதிகழ்மிடற்றாவெங்கைநாட்டனைதம்புயத்தி
னீலஞ்சிறுமுத்துதிர்ப்பதென்னோசொன்னெடுந்தகையே. ()

தலைமகள்கலுழ்தற்காரணங்கூறல்.

தெண்ணீர்முடியர்திருவெங்கைவாணாசெழுஞ்சிலம்பிற்
பண்ணீர்மைமென்மொழிப்பாவைநல்லாயிப்படிமுழுது
மெண்ணீர்மையன்பரைக்கண்டனமால்வந்ததென்றனது
கண்ணீரகொடுமென்முலைமேற்பசப்பைக்கழுவுற்றதே. (உகஉ)

தலைவன் றெய்வங்காட்டித்தெளிப்பத்தெளிந்தமைகூறல்.

கொலைசூழ்குருகுமொன்றுண்டாற்கரிநெறிகூறுமெனி
லிலைசூழ்மனையின்முனிவரொல்லாந்தொழுமெங்கள்பழ
மலைசூழ்மறுகெழில்வெங்கைநன்னாடர்மனந்தெளியச்
சிலைசூழ்வனந்திகழ்தெய்வதங்காட்டித்தெளித்ததற்கே. (உகங)

பாங்கியியற்பழித்தல்.

முனங்குழையாதமலைகுழைத்தாரம்முதல்விகண
தனங்குழையாதுகுழைந்தார்தம்வெங்கைத்தடஞ்சிலம்பிற்
கனங்குழையாயுனக்கீந்தாரிலைகொனங்காவலனார்
மனங்குழையாமன்முனந்தாமருந்துமருந்தினையே. (உகச)

தலைமகளியற்படமொழிதல்.

உழைகாதலிக்குங்கரத்தார்நிறைமதியொத்தசங்கக்
குழைகாதிற்பெய்பவர்தென்வெங்கைவாணர்குளிர்சிலம்பின்
மழைகாதலிக்குங்கொடையன்பர்மேற்பிறர்வாயுரைக்கும்
பிழைகாதிற்கேட்பவந்தோபடைத்தானயன்பெண்பிறப்பே. ()

தெய்வம்போறைகோளச்செல்தவமென்றல்.

புற்றங்கதமணிவெங்கைபுரேசர்பொருப்பிலெங்கள்
சுற்றந்தொழுமெங்கொழுநர்நிற்காட்டிமுன்சூளுரைத்த
குற்றம்பொறுத்தருளென்றடிபோற்றிக்கொழுமலர்தூய்ச்
செற்றந்தணிக்குதும்பெண்ணேயினிக்குலதெய்வத்தையே. ()

தலைவி மில்வயிற்செறித்தமையியம்பல்.

சுட்டாவறிவுருவானாரவ்வானிற்சுரர்தமக்குங்
கிட்டாவமுதனையார்வெங்கைவாணர்கிரியணங்கே
மொட்டாமுலையிற்பசலைகண்டேமனைமுன்றில்விடா
ளிட்டாளிலைவிலங்கென்பதொன்றேகுறையீன்றவட்கே. ()

செவிலி கனையிருளவன்வரக்கண்டமைகூறல்.

மீனைக்கடந்தபொழில்சூழரன்றிருவெங்கைவெற்பர்
கானைக்கடந்துகுறிவாயிருள்வரக்கண்டனள்யாய்
மானைக்கடந்தவிழியாய்தரளமணிவடத்த
வானைக்கடந்தவிளஞ்சிங்கமோவென்றயிர்த்தனளே. (உகஅ)

எறிவளைவேற்றுமைக்கேதுவினவல்.

கனம்வேறுபட்டமிடற்றார்தம்வெங்கைக்கனகவெற்பிற்
புனம்வேறுபட்டிங்குவந்தவன்றேநம்புரிகுழற்குத்
தனம்வேறுபட்டுவிழிவேறுபட்டுத்தளர்ந்துமொழி
மனம்வேறுபட்டதென்னோவுரையாய்செவ்வரிக்கண்ணியே. ()

பாங்கிவேறிவிலக்கல்.

வீட்டையுவந்துதருவார்திருவெங்கைவெற்படுத்த
காட்டைவிரும்பியுறைதெய்வமேயெங்கள்கன்னிபடும்
பாட்டைநினைந்திலைவாளாவுலகிற்பலர்விரும்பு
மாட்டைவிரும்பினைநன்றோவிதுசொல்லறிவினுக்கே. (௩00)

வெறிவிலக்கியவழி செவிலிவினுதல்.

மின்னேவெமிக்குஞ்செஞ்சடையார் திருவெங்கைவெற்பிற்
பொன்னேய்விலக்குவமென்றெண்ணியாங்கள்புகும்பொழுதி
லென்னேவெறிவிலக்குற்றுயிளமுலையேந்திழையா
டன்னேயறிந்தனையேலுரையாய்மைத்தடங்கண்ணியே. ()

பூத்தருபுணர்ச்சியாலறத்தோடுநிற்றல்.

தடுக்கநிறைபுனற்பண்ணையிற்சூன்முதிர்சங்கம்வந்து
படுக்கநளினமலர்வெங்கைவாணர்பனிவரைமே
லுடுக்கவுதவினன்மாந்தழைமாமலரொண்ணுதற்குக்
கொடுக்கமதனைவிடுத்தகன்றுனொருகோமகனே. (௩௦௨)

புனறருபுணர்ச்சியாலறத்தோடுநிற்றல்.

வான்கற்றவண்புகழ்வெங்கைபுரேசர்மணிவரைமேற்
றான்கற்றகல்விதளர்வுதவுந்தகையெனவே
தேன்கற்றமென்மொழியாள்வருநீரொடுசெல்பொழுதி
லூன்கற்றவேலுரவோனொருவேந்தனுதவினனே. (௩௦௩)

களிறுதருபுணர்ச்சியாலறத்தோடுநிற்றல்.

ஐங்கைக்களிறுதரும்வெங்கைவாணரணிவரைமேல்
வெங்கைக்களிறுதனைப்பாய்வுறவரமெய்ந்நடுங்கிக்
கொங்கைக்களிறுபுறம்பாய்வுறப்புல்லிக்கொண்டனள்வேற
செங்கைக்குமரனையன்னுனொருவனைத்தேமொழியே. (௩௦௪)

மணம்விலக்கல்.

வன்னித்திருவிழியார்வெங்கைவாணர்மணிவரைமே
லிந்நித்திலவடநல்கின்றதேயன்றியே திலர்க்குக்
கன்னிக்குமரிமணமுடையாளல்லள்காண்டகைய
சென்னிக்கணிமுடிதாட்கணியாகுஞ்செயலில்லையே. (௩௦௫)

தலைமகள் வேற்றுமைகண்டுநற்றாய்சேவிலியைவினாதல்.

நெடுங்கோவளவயல்வெங்கைபுரேசரைநெஞ்சிருத்தாக்
கொடுங்கோலரசர்குடைக்கீழடங்குங்குடியெனவே
யிடுங்கோல்வளைவிழிநீரொழியாமலிருப்பதென்னோ
வடுங்கோல்புரைவிழிவெண்முத்தவாணகையாயிழையே. ()

சேவிலிநற்றாய்க்கு முன்னிலைமொழியாலறத்தொடுநிற்றல்.

புலங்கண்டளவின்மறைவெங்கைவாணர்பொருப்பிடைச்செந்
நிலங்கண்டளவிலுறைதிரிந்தாங்கொர்நெடுந்தகைதன்
னலங்கண்டளவினலந்திரிந்தாண்மென்னகின்மிசையோர்
கலங்கண்டளவின்மிகநோமருங்குலுன்காரிகையே. (ஙூ0எ)

நற்றாய்தமருக்கறத்தொடுநிற்றல்.

வேலோடுவாளும்பயினமர்காணம்விளங்கிழையைப்
பாலோடுதேன்கலந்தாங்கிளவாளைபணைமருதச்
சேலோடுபாயுந்திருவெங்கைவாணர்சிலம்பினெடு
மாலோடுமானுமொருவேலவற்குமணஞ்செயுமே. (ஙூ0அ)

உடன்போக்கு.

பாங்கிதலைவற்குடன்போக்குணர்த்தல்.

தாயிற்சிறந்ததிருவெங்கைவாணர்தடஞ்சிலம்ப
போயிப்பொழுதுவருவலென்றேகிற்பொறுக்கறியா
டீயிற்புழுவெனவேபதைப்பாணின்றிருவருளா
னீயித்திருவையுடன்கொடுபோநின்னெடுநெகர்க்கே. (ஙூ0ஙூ)

தலைவனுடன்போக்குமறுத்தல்.

அனிச்சமுமன்னத்தின்றூவியுமாதரடிமலர்க்குச்
சனித்தநெருஞ்சிப்பழமென்றறிந்துந்தகுவரன்றி
மனித்தர்வழங்கரும்வெங்கொடும்பாலைவழியொருநா
ளினித்தமொழியுடையாளையெவ்வாறுகொண்டேகுவனே. ()

பாங்கிபோக்குடன்படுத்தல்.

துணையிற்புணர்களிவண்டினம்பூந்தண்டுணைர்பொதுளும்
பணையிற்றுயில்பொழில்வெங்கைபுரேசர்பனிவரையாய்
பிணையிற்பிறழ்கருங்கண்ணுட்குநின்னைப்பிரிந்தமல
ரணையிற்கொடியதுவோவையநீசெல்லழற்சுரமே. (௩௧௧)

தலைவன்போக்குடன்படுதல்.

நாமொழியாதுபுகழ்வானருள்வெங்கைநாதரைச்சொல்
பாமொழியானெய்தலாம்பாலைஞானசம்பந்தனுக்குத்
தேமொழியாயுன்னுயிரனையாட்கருஞ்செம்பவள
வாய்மொழியாலிளங்காவாகும்பட்டமரங்களுமே. (௩௧௨)

பாங்கிதலைவிக்குடன்போக்குணர்த்தல்.

தேவியுஞ்சம்புவுநீங்காதவெங்கைச்செழுஞ்சிலம்பர்
காவியுங்கஞ்சமுமாம்பலும்பூத்துக்கவின்கனியும்
வாவியும்பெண்ணணங்கென்றூர்கதிர்தெறும்வன்சுரத்திற்
காவியுங்கண்ணுமமுதமும்போன்றொளிராரணங்கே. (௩௧௩)

தலைவிநாணழிவிரங்கல்.

ஊணிலையாகநஞ்சுணடோன்றிருவெங்கையூரனைய
வாணிலையாகுமதர்விழியாய்முன்வனைந்திருந்த
பூணிலையாகுமவயவம்போலப்பொலிவழிவார்
நாணிலையாகிற்றனுவாற்பயனென்னைநங்கையர்க்கே. (௩௧௪)

கற்புமேம்பாடுபூண்முலைப்பாங்கிபுகறல்.

சேண்போலுமேனியர்தென்வெங்கைவாணர்செழுஞ்சிலம்பிற்
பாண்போலுமென்மொழிச்செந்துவர்வாய்மலர்ப் பாவையன்னு
பூண்போலுநாண்முதலெல்லாமுமங்கலப்பூங்கழுத்தி [ய்
ஞண்போலுமாணுறுங்கற்பொன்றுமேகுலநாரியர்க்கே. (௩௧௫)

தலைவியோருப்பட்டேழுதல்.

நரைப்பால்விடையர்பிறையார்சடையர்மெய்ஞ்ஞானமயர்
வரைப்பாவைபங்கர் திருவெங்கைவாணர்மணிவரைமே
லுரைப்பாருரைப்பவையெல்லாமுரைக்கவுனக்கிசைவேற்
றிரைப்பாவையேசெல்லுவேனன்பரோடருந்தீச்சுரமே. (ருகசு)

பாங்கி சுரத்தியல்புரைத்துழித்தலைமகள்சொல்லல்.

மாவோவெனுங்கறைக்கண்டர்வெங்கேசர்மணிவரைமே
லேவோவெனுங்கண்ணிளங்கொடியேமதனெய்யுநறும்
பூவோபயில்வெண்மதியோகனிகொளுப்பூங்குயில்வாழ்
காவோவிறைவருடனேபுகுங்கள்ளிக்காடெனக்கே. (ருகஎ)

பாங்கிகையடைகோடுத்தல்.

இறந்தார்பிறந்துழலாதேமுதுகுன்றியற்றுசெயல்
சிறந்தார்புகழ்வெங்கைசெய்வானருளுஞ்சிவனுமையை
யறந்தானுருவுகொண்டன்னுன்வசிட்டனருந்ததியைத்
துறந்தாலுநீ துறவேலையனேநின்றுணைவியையே. (ருகஅ)

பாங்கிவைகிருள்விடுத்தல்.

வெங்கேதகைமுனிவார்வெங்கைவாணர்தம்வெற்பிலன்னை
யெங்கேமகளென்றிறுப்பாளவட்குன்னியல்பதனை
யிங்கேயிருந்துரைத்தோரிமைப்போதினுளெப்படியு
மங்கேவந்துன்னொடுகூடுவனுன்மலராரணங்கே. (ருகரு)

தலைமகளைத்தலைமகன்சுரத்துய்த்தல்.

கொடும்பாவிகளுமொருமாதவப்பயன்கொள்வனென
நெடும்பார்மிசையின்றறிந்தாம்விழிபொழிநீர்பெருகச்
சுடும்பாலையிலுன்றிருவடித்தாமரைதோய்ந்தமையா
லடும்பாதகநஞ்சமுண்டமைவார்வெங்கையாரணங்கே. (ருஉ0)

தலைமகன்பொழில்கண்டுவியத்தல்.

பிறப்பாம்வனம்புக்குழல்வார்தமக்குப்பெரிதுமுன்செய்
யறப்பாலுதவுந்திருவெங்கைவாணரடிநிழல்போ
லுறப்பாலைசெய்துயரொல்லாமொழியவொளியிழைதாழ்
நிறப்பாரமென்முலையாய்பொழிலோவொன்றுநேர்ந்ததுவே. ()

தலைமகன்றலைமகளைவறிந்திருத்தல்.

ஆடும்பதத்தர்திருவெங்கைவாணரதிகபுகழ்ப்
பாடுங்குமுதம்புனலூறவேயப்பரிதியினால்
வாடுங்கமலமுகவேர்புலரமலர்ந்துதென்ற
லோடுங்குளிர்தண்பொழிற்கேயிருந்தருளொண்ணுதலே. ()

உவந்தலர்சூட்டியுண்மகிழ்ந்துரைத்தல்.

எண்ணியவெண்ணமுடிப்பார்தம்வெங்கையிமையவெற்பி
னுண்ணியநூன்மருங்குற்கனிவாய்வின்னுதலியுன்றன்
மண்ணியநீலமணிவார்குழலின்மலர்புனையப்
பண்ணியபுண்ணியமுன்னமென்னோவென்றன்பாணிகளே. ()

கண்டோரயிர்த்தல்.

நந்தனும்வெள்ளைமதகரிவேந்துநறியவர
விந்தனுமுள்ளங்கசிந்தேத்தும்வெங்கைவிமலர்தருங்
கந்தனும்வள்ளியுமோவறியேமிந்தக்காளையெழின்
மைந்தனும்வள்ளிதட்போதணிவார்குழன்மங்கையுமே. (ருஉச)

கண்டோர்காதலின்விலக்கல்.

தாதையனைய திருவெங்கைவாணர்தடஞ்சிலம்பிற்
சீதையொடுவருமாலனையாயித்திருநுதிழையாள்
கோதைவெயிலிடைப்பட்டனையாளெங்குடிலில்வைகி
மாதையுடன்கொண்டுநாளையுனனூர்க்குவழிக்கொள்கவே. ()

கலிடோர்தன்பதியணிமைசாற்றல்.

பணியேறியசெஞ்சடைவெங்கைவாணர்பனிவரைமேற்
கணியேறுமாவிற்படர்கொடிமீதுகழனிவளை
யணியேறுவேழம்பர்போலேதவழுமணிநகர
மணியேறுதோளண்ணலேயுங்கண்மாடவளநகரே. (௩௨௬)

தலைவன் தன்பதியடைந்தமைதலைவிக்குணர்த்தல்.

பன்னகாகின்னரமன்னவரென்றும்பரவுவெங்கை
நன்னகர்தன்னகரென்னுமெம்மான்கிரிநன்னுதலாய்
பொன்னகரெங்நகரிந்நகர்முன்னெனப்போற்றலுறு
மிந்நகரென்னகர்நின்னகராகவெழுந்தருளே. (௩௨௭)

கற்பொடுபுணர்ந்தகௌவை.

செவிலிபாங்கியைவினாதல்.

சொன்மாதுதன்புகழ்யாழிலிட்டேததிதொழுமிமைய
நன்மாதுபங்கர்திருவெங்கைவாணர்நன்னுடனையா
யென்மாதுசென்றவிடமேதறிந்திலனின்முழுதும்
பொன்மாதுசென்றமனைபோற்பொலிவறப்புலலென்றதே. ()

பாங்கிசெவிலிக்குணர்த்தல்.

சாந்தந்தருபவர்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பிற்
சேந்தங்கயல்விழிநீர்மல்கவேநின்றுதேம்புமன்னே
காந்தந்தொடர்கரும்பொன்போலவின்றுதன்காந்தனைக்கண்
டேந்தங்கலமுலைச்செம்பொன்னனுடொடர்ந்தேகினளே. ()

செவிலி யினையலென்போர்க்கெதிரழிந்துமொழிதல்.

அனையேயனையவருளாளர்வெங்கையணிவரைமே
லினையேயெனவெனக்கோதிநிற்பீரெனைப்போலவொரு
புனையேடவிழ்மலர்க்கோதையைப்பாலையிற்போக்கிநின்றால்
வினையேனுறுதுயரெல்லாமுமக்குவெளிப்படுமே. (௩௩௦)

செவிலி தன்னறிவின்மைதன்னைநோந்துரைத்தல்.

புன்றோலுடையர் திருவெங்கைவாணர்பொருப்பணங்கு
வன்றோளிராமனெடுசீதைதங்கண்மனைகடந்து
சென்றோவனம்புகுந்தாளென்பர்மாசிறெரிவையர்க்கு
நன்றோவதுபிழைதானோவென்றாளதுநாடிலனே. (ரூரூக)

செவிலிதெய்வம்வாழ்த்தல்.

செடிமுழுதும்புலிதுஞ்சுபொல்லாதவெந்தீச்சுரத்தி
லடிமுழுதுஞ்செம்புனல்பாயச்சென்றவணங்குவந்தாற்
படிமுழுதும்புகழ்வெங்கைபுரேசர்தம்பாலனுக்கெங்
குடிமுழுதுந்தொழும்பாளாகவோலைகொடுக்குதுமே. (ரூரூஉ)

செவிலிநற்றாய்க்கறத்தோடுநிற்றல்.

வேலைத்தரளமுமைந்தலைநாகவியன்மணியுஞ்
சோலைச்செழுமலரும்போலநம்மைத்துறந்துமெல்ல
மாலைக்குழலிதனக்குரியானைமணந்துசென்றாள்
பாலைப்பொருமொழிபங்கர்வெங்கேசர்பனிவரைக்கே. (ரூரூரூ)

நற்றாயயலார்தம்மோடுபுலம்பல்.

பொன்போ லொருபெண் டிருவெங்கை யானருள்பூண்டுபெற்
றென்போலிலையுலகம்ப திஞன்கினுமிப்பொழுது [றோ
துன்போடழுங்குமவருமென்போலிலைச்சோகமுறே
லென்போரறிகுவரோவறியாரிவ்விரண்டையுமே. (ரூரூசு)

நற்றாய் தலைமகள்பயிலிடந்தம்மோடுபுலம்பல்.

ஆவிக்குரியர் திருவெங்கைவாணரணிவரைமேன்
மேவிக்குடையுஞ்சுனையேமலாகொய்யுமென்பொழிலே
வாவிகுமுதமலாவாய்சிறிதுமலர்ந்துபெற்ற
பாவிகுரையுமென்றென்சொலலிப்போயினள்பாதகியே. ()

நிமித்தம்போற்றல்.

பாவிரிமாபுகழ்வெங்கைபுரேசர்பனிவரைமேற்
பூவிரிவான்பொழில்காப்பதற்காகப்பொருதிரைத்தண்
காவிரிமாதைவருவித்தகாக்கையுங்காக்குங்கொலோ
மாவிரிமாகுழனன்மாதையீங்குவரவழைத்தே. (சுசுசுஅ)

சுரந்தணிவித்தல்.

சங்கலைதரைதாண்புனலூர்வயனுவற்றலைவனுக்குச்
செங்கலைப்பொன்செய்ததென்வெங்கைவாணா திருவருளாற்
பொங்கலைததண்புனற்காவிரிநாட்டிற்பொலிகநிறை
யங்கலைதிங்கண்முகமாதுசென்றவருஞ்சுரமே. (சுசுஎ)

தன்மகண்மென்மைத்தன்மைக்கிரங்கல்.

நோக்கக்குழையுஞ்சிலையாளர்வெங்கையினுண்ணிடையார்
மோக்கக்குழையுமனிச்சமென்பூவின்முகந்திருத்தித்
தூகककுழையும்பதங்கள்வெம்பாலைச்சுடுபரலிற்
றாக்கக்குழையுங்கொலோகுழையாதெங்கடையலுக்கே. (சுசுஅ)

இளமைத்தன்மைக்குளமெலிந்திரங்கல்.

பேதைப்பருவமிறந்தேபெதும்பைப்பிராயமுறும்
போதைததொடங்கிமருண்மாலைபோல்பவள்போனதென்னோ
மாதைககலந்தவிடத்தாதிருவெங்கைவாணர்வெற்பிற்
கோதைச்செழுங்கதிர்வேல்வேந்தொடுமக்கொடுஞ்சுரமே. ()

அச்சத்தன்மைக்கச்சமுற்றிரங்கல்.

ஆலமெழும்பொழுதவ்வெங்கைவாணாக்கபயமென
வோலமிடுஞ்சுரர்போலேயபயமென்றோடுங்கொலோ
ஞாலமிடந்துதிரிந்தவக்கோலமுநாணவொரு
கோலமெழும்பொழுதஞ்சிமுன்போந்தகொழுநனுக்கே. (சுசுஐ)

கண்டோரிரக்கம்.

துன்படுமையர் திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேன்
மின்படுநுண்ணிடையாள்விளையாடியமென்பொழிலும்
பொனபடுமோசலும்வண்டலும்பாவையும்பூவையுங்கண்
டென்படுமோவறியேம்பெற்றதாயென்றிருப்பவளே. (ரூசக)

சேவிலியாற்றத்தாயைத்தேற்றல்.

வெல்லப்படாதவயில்விழியாள்செயல்வேறொன்றன்றிச்
சொல்லப்படாதசெயலாய்முடியிற்றுயர்தனன்றோ
வல்லற்படாதியன்னேவெங்கைவாணரருள்கொடுநான்
செல்லப்படாதவிடமேனுஞ்சென்றுதிருப்புவனே. (ரூசஉ)

ஆற்றிடைமுக்கோற்பகவனாவினுதல்.

தன்னேததலைவனைநின்றுங்கறிந்துதவம்புணாந்து
முன்னைப்பவநதொலைததிருண்மைகூறுமின்மூரிவெள்ள[ங்கள்
மின்னைப்பொருசெஞ்சடையில்வைத்தார்வெங்கைவெற்பிலெ
பொன்னைகரந்தொருகாளைகொண்டேதனிபோயினனே. ()

மிக்கோரேதுக்காட்டல்.

சேவிற்பிறங்குங்கொடிவெங்கைவாணர்சிலம்பணங்கே
பூவிற்பிறந்தபசுந்தேன்விரைவழிபோந்தணுகு
மாவிற்கலதுமலர்க்கேதுசெய்யுமவ்வாறெனவே
யேவிற்சிறந்தவிழியாணமக்குமென்றெண்ணுகவே. (ரூசஅ)

சேவிலியெயிற்றியொடுபுலம்பல்.

அள்ளியளைந்துபசுந்சாதளியினமம்புயமென்
பள்ளியுறங்குந்திருவெங்கைவாணர்பனிவரையாள்
வள்ளிநடந்தவழிதூர்ந்திடாதவ்வழிநடந்தாள்
கள்ளிபடர்ந்தசுரத்தேவருமறக்காரிகையே. (ரூசரு)

செவிலிதாயவோடுபுலம்பல்.

புரவேபுரியுந்திருவெங்கைவாணர்புனையுமணி
யரவேபுரையுமகலல்குலாளொடனைதுயர
வரவேதகுவதன்றென்றாயிலைமலர்வாய்திறக்குங்
குரவேமொழிநல்குரவேநினக்கிதுகூறுதற்கே. (ரூசசு)

சுவடுகண்டிரங்கல்.

புலியோடரவுதொழுங்கூத்துடையவர்பூவையர்கைப்
பலியோடுயிர்கவர்வெங்கைபுரேசர்பனிவரைமேன்
மலியோதியினிசைவண்டுபெண்பாடுறும்வஞ்சியடி
கலியோமுனஞ்செலும்வெள்ளடியோடுகலந்ததுவே. (ரூசஎ)

செவிலி கலந்துடன்வருவோர்க்கண்டுகேட்டல்.

வேண்டாருயிர்கவர்செவ்வேலிறைவனுமெல்லியலு
மீண்டாரெனவுண்மகிழ்ந்துநின்றேன்மலர்வேதன்முதன்
மாண்டாரெலும்பணிவெங்கைபுரேசர்மணிவரைமேற்
றூண்டாவிருஞ்சுடர்போல்வருவீரெதிர்தோன்றுறவே.(ரூசஅ)

அவர்புலம்பறேற்றல்.

என்னூர்பெயரவ்விளங்காளையுமிவ்விலங்கிழையா
டன்னூர்பெயர்நும்பிணைவிழியாளுந்தனிவினவிப்
பொன்னூபுரவடிவஞ்சிபங்காளர்பொருந்துகொடி
மின்னூர்முகிலுறங்கும்பொழில்சூழ்வெங்கைமேவினரே. ()

செவிலி புதல்வியைக்காணாதுகவலைகூர்தல்.

சேணுடியமதில்வெங்கைபுரேசர்செழுஞ்சிலம்பின்
மாணுவலர்மொழிவார்க்கேதுசொல்வனென்வாய்திறந்து
நாணுதினியெங்ஙன்மீண்டுடனன்னகர்நான்புகுவேன்
காணுமருங்குலொருமாதையாற்றிடைக்கண்டிலனே. (ரூரூ0)

மீட்சி.

தலைவிசேணகன்றமைசெவிலிதாய்க்குணர்த்தல்.

கூனுமபிறையொன்றணிவார்தம்வெங்கைக்குளிர்சிலம்பி
லூனுங்குருதியுந்தோய்வடிவேலனொருவனொடு
மானுங்கயலும்பணிவிழியாளரிமாவழங்கு
கானுங்கரைபொருகான்யாறுங்குன்றுங்கடந்தனளே. (கூருக)

தலைவன்றம்ழர்சார்ந்தமைசாற்றல்.

சேய்விளையாடுந்திருமார்பர்வெங்கைச்செழுஞ்சிலம்பி
னீவிளையாடுஞ்சுனையீதுநாண்மலர்நீபறிப்ப
மாவிளையாடும்பொழிலதுகாணிளமந்திமுதிர்
வேய்விளையாடுமவ்வெற்பேநமவெற்புவிளங்கிழையே. (கூருஉ)

தலைவிமன்செல்வோர்தம்மோடுதான்வரல் பாங்கியர்க்குணர்த்திவிடுத்தல்.

வேலையிற்றோன்றுநஞ்சுண்டோன்றிருவெங்கைவெற்பிலளி
சோலையிற்பாடுமெம்மூர்புகுவீரிதுசொன்மினறு
மாலையிற்றோன்றுங்கதிர்வேலவனொடுமாவழங்கு
பாலையிற்போயினமாதுவந்தாளென்றுபாங்கியர்க்கே. (கூருங)

ஆங்கவர்பாங்கியர்க்குணர்த்தல்.

வெளிறுந்தரளநகையீரரன்றிருவெங்கைவெற்பிற்
களிறும்பிடியுமுடங்குளைக்கோளரிகண்டுடைந்து
பிளிறுஞ்சுரதமிடைப்புக்கநும்மாதுபிறழுமின்போ
லொளிருங்கதிர்வடிவேலுடையாளொடிங்குற்றனளே. (கூருச)

பாங்கியர்கேட்டுநற்றாய்க்குணர்த்தல்.

கீற்றுப்பிறையர்திருவெங்கைவாணர்கிரியிலன்னே
கூறறுகுடிததவுயிர்மீண்டெனததன்கொழுநனொடு
வேற்றுப்புலத்தினின்றுற்றுளெனச்சிலர்மெய்யுரைத்தா
ராற்றுப்படுத்துன்மனத்தேயிருந்தவருந்துயரே. (கூருரு)

நற்றாய் கேட்டவனுளங்கோள்வேலனைவினாதல்.

கைக்காலசூலததாவெங்கையிலேநற்கடவுடர
முக்காலமுமுணர்ந்தீருலகாளுமுடிமன்னவன்
மைக்காவியங்கண்மடமாதுடனெம்மனைவருமோ
தக்காபுகழ்தம்மனைபுகுமோவொன்றுசாற்றுமினே. (கருசு)

தன்மனைவரைதல்.

நற்றாய் மணமயர்வேட்கையிற்செவிலியைவினாதல்.

மின்னைப்பயந்தவெனக்கோகதிர்வடிவேலொருவன்
றன்னைப்பயந்தவனைககோதிருவடித்தாமரையி
லென்னைப்புரந்தவாவெங்கையன்னாய்மணமேற்றுவக்கு
முன்னைததவமெவாககோவறியேம்வந்துமுற்றுவதே. (கருஎ)

செவிலிக்கிதுளைவரைந்தமையுணர்த்தல்.

செவ்வாய்மடமயிறன்னையன்னேமணஞ்செய்திருந்தா
ரவ்வாளரியனையாரென்றுதூதரறைந்தனராற்
சைவாகமந்திகழ்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பி
லெவ்வாறறைவதறங்கோடிசெய்துமுன்னீன்றவட்கே. ()

வரைந்தமைசெவிலிநற்றாய்க்குணர்த்தல்.

பொன்னாரிதழிததொடையாளாவெங்கைப்பொருப்பிலிந்த
நன்னாளினிவருங்காலததுருதெனநன்மணஞ்செய்
தன்னாய்வருகின்றனர்மடமாதுடனன்பரென்று
சொன்னார்மொழிபிறழாதுண்மைகூறுநற்றாதுவரே. (கருகூ)

தலைவன்பாங்கிக்
கியான்வரைந்தமைநுமர்க்கியம்புசென்றென்றல்.

ஊனெழுவாய்மழுவெங்கைபுரேசருயர்சிலம்பிற்
றேனெழுவார்குழலாய்நுமர்தேறத்தெளித்தருள்வாய்
வானெழுமீரமதிவாண்முகத்துங்கள்வல்லிதனை
யானெழுநாவொன்றுசான்றாகச்செய்தவிருமணமே. (கருஅ)

பாங்கி தானதுமுன்னேசாற்றியதுரைத்தல்.

பன்னாளுருந்தவஞ்செய்ததன்மாதைப்பனியிமைய
நன்னாகநலகவரைநதாதிருவெங்கைநாடளிக்கு
மனனாவெம்மேமவரைவளாமாதைவரைந்தமைதான்
முனனாவறிந்துபயந்தாடமக்குமொழிநதனனே. (ருசுக)

உடன்போக்கிடையீடு.

நீங்துங்கிழத்திபாங்கியர்தமக்குத்
தன்செலவுணர்த்திவிடுத்தல்.

வெறிமேவுகொன்றையம்பூந்தொடையார்திருவெங்கைவெற்பி
கறிமேவுமுப்பெனவன்பரிற்கூடிவெங்கானகததி [ற்
னெறிமேவுமகைமகிழ்ந்துசென்றாளெனநீருரைமின்
மறிமேவுமுண்கண்மடக்கொடிமாதர்க்குமாதவரே. (ருசுஉ)

தலைமக டன்செலவீன்றட்துணர்த்திவிடுத்தல்.

மின்னைத்திருத்துமவிர்சடையார்திருவெங்கைவெற்பிற்
பொன்னைப்பரித்ததிருமார்பரோடதர்போயினளென
றென்னைக்கொடுத்துககலங்கவிழ்நாய்கனெனக்கவலு
மன்னைக்குரைத்தருளீர்வழுவாநெறியந்தணரே. (ருசுரு)

நற்றாயக்கந்தணர்மொழிதல்.

அல்லஞ்சுகண்டார்திருவெங்கைவாணரணிவரையீ
ரில்லஞ்சுரமச்சுரமேதன்னில்லமெனக்கருதி
வல்லஞ்சுமென்முலையாணடந்தாளென்வழிச்செலவைச்
சொல்லந்தணவனைக்கென்றுவெம்பாலைச்சுரத்திடையே. ()

நற்ற யறத்தோடுநிற்றலிற்றமர்பின்சேறலைத்
தலைவிகண்டுதலைவற்துணர்த்தல்.

கலவளைததன்றுபுரமெரித்தார்கருங்காவியங்கட்
பலவளைச்செங்கைக்கொடிபாகர்வெங்கைப்பனிவரையாய்
வில்வளைத்தம்புபொழிந்தார்த்தெழுந்துவியன்சிலம்பைச்
செல்வளைப்புற்றதுபோல்வளைந்தாரெமர்தேரினையே. (ருசுரு)

தலைமகடன்னைத்தலைமகன்விடுத்தல்.

செருகிக்கிடந்தமதிவேணியாதிருவெங்கைவெற்பிற்
சருகிற்புகுஞ்சுழல்காற்றுகுவன்பகைச்சாவினரேற்
குருகிறசிறந்தகைததோகாய்நுமரைக்கொலாமையினு
லருகிற்செலவஞ்சுவேனிற்கநீயிவ்வதரிடையே. (ருசுசு)

தமருடன்செல்பவளவன்புறநோக்கிக் கவன்றரற்றல்.

கன்மலையென்னினுமவ்வேடர்பெய்யுங்கணைமழைக்கிங்
கென்மலையென்னும்புயததோர்க்கிடந்தருமிம்மலைதான்
பன்மலையென்னுமணிமாடவெங்கைப்பழமலைவாழ்
பொன்மலைவெள்ளிமலைபோற்பொலிகபுகழ்படைததே. (ருசுஎ)

வரைதல்.

சென்றேன்மீண்டுவந் தந்தணர்சான்றேரைழன்னிட்
டருங்நலந் தந்துவரைந்துழிக்கண்டோர்சாற்றல்.

கருவேரறுக்குந் திருவெங்கைவாணாக்குங்கற்புமைககு
மருவேள்விநன்மணஞ்செய்துசெம்பாதிமெய்யாயினவால்
வருவேதநன்னெறிதான்வழுவாமன்மணம்புணர்ந்து
பொருவேலிறைவற்குநன்மாதினுக்குமெய்பூரித்தவே (ருசுஅ)

வரைவியல் முற்றிற்று.

கற்பியல்.

இல்வாழ்க்கை.

தலைவன்றலைவிமுன்பாங்கியைப்புகழ்தல்.

கலைகாணரும்புகழ்வெங்கைபுரேசர்கனகவெற்பிற்
குலைகாணலைபுனற்பண்ணையினுக்குபைங்கூழ்விளைவுற்
றுலைகாணளவும்வருந்துகின்றாரினென்னெண்டொடைமின்
முலைகாணளவும்வருந்தினைவாழிமுகிண்முலையே. (ருசுகூ)

தலைவனைப்பாங்கிவாழ்த்தல்.

மால்போலிருக்குமிறைநீயணிந்தநன்மங்கலநாண்
பால்போலிருக்குமொழியாட்குவெங்கைப்பரனணிந்த
சேல்போலிருக்கும்விழிமாதுமையின்றிருககழுத்தி
னூல்போலிருக்கப்பெறுகதின்மாதவநோக்கடைந்தே. (௩௭௦)

பாங்கிதலைவியை வரையுநாளளவும் வருந்தாதிருத்தமை யுரையாயென்றல்.

போற்றலர்போற்றுங்கதிர்வேலவன்பொனபுனையளவு
நீற்றலாமேனியர்வெங்கையிலேயுண்ணிரம்புசெருதே
னூற்றலரொன்றிற்கொடிநுசுப்பாயிவ்வுலகநிறை
தூற்றலரெங்ஙனநீசுமந்தாற்றினைசொல்லுகவே. (௩௭௧)

பெருமகளுரைத்தல்.

வினைக்கூறுசெய்தன்றிருவடிததாமரைமேவுறவென்
றனைக்கூவுமையர்திருவெங்கைவாணர்தடஞ்சிலம்பின்
முனைக்கூரயில்விழியாயின்றுகாறுமுதல்வருட
னெனைக்கூறிடுமலரேதுணையாகவிருந்தனனே. (௩௭௨)

தலைவனைப்பாங்கிவரையுநாளளவு நிலைபெறவாற்றியதிலைமைவினுதல்.

வேலைதருவிடமிண்டோன்றிருவெங்கைவெற்பிலெழு
காலையிரவியனையாயெவ்வாறுகனலிமுனஞ்
சோலையிளமயிலன்னாள்கழுததிற்சுரும்புமுரன்
மாலையிடுமளவும்பொறுத்தாய்மலர்வாளியையே. (௩௭௩)

மன்றன்மனைவருசெவிலிக்கிதுளை யன்புறவுணர்த்தல்.

இலருமுளருமலர்வெங்கைவாணரிமையவெற்பி
லலருமலருமலர்த்துவெய்யோனுமன்றொன்றற்கொன்று
மலருமிருபொருளுண்டாயின்மங்கைக்குமன்னவற்கும்
பலருமிசையவொப்பாகுமன்னேயிப்படியகத்தே. (௩௭௪)

பாங்கி யில்வாழ்க்கைநன்றென்றுசெவிலிக்குரைத்தல்.

பல்லறமாற்றியுமெலலாமொருங்குபடத்துறந்தோர்
நல்லறமாற்றுந துணையாகவும்பெறுநன்மையினு
லலலறமாற்றுங்களதசாதிருவெங்கையாரணங்கி
னில்லறமாற்றவுநன்றெனுமாலிவ்விருநிலமே. (௩எரு)

மணமனைச்சென்றுவந்தசெவிலி
பொற்றொடிகற்பியனற்றாய்க்குணர்த்தல்.

மெய்யாமிறைவர் திருவெங்கைவாணர்தம்வெற்பில்வளைக்
கையாளுடனவ்வருந்ததிமாதொப்பள்கற்பினென்றாற்
பொய்யாமருங்குலவள்வாழுமூக்குப்புயல்களெனறும்
பெய்யாவிவளிடந திங்கணமும்மாரியும்பெய்திடுமே. (௩எசு)

நன்மனைவாழ்க்கைத்தன்மையுணர்த்தல்.

நூறுஞ்செறியிதழ்ததாமரைததேனுமந்நுண்கெளுஞ்
சேறுமபழனததிருவெங்கைவாணர்செழுஞ்சிலம்பிற்
பேறும்பெருவிருந்தோடுதன்கேளைப்பிடிகடொறும்
வேறுஞ்சுவைபெறவூட்டிப்பின்றானுணுமெல்லியலே. (௩எஎ)

செவிலி நற்றாய்க்கிருவர்காதலையுமறிவித்தல்.

கருமாமணிகண்டர்தென்வெங்கைவாணர்கைக்கார்முகமா
மொருமாமலையைவலங்கொண்டுகாலையுதயவெற்பில்
வருமாதவன்றிருதேர்மெய்மமைபோலப்புன்மாலையினிற்
செருமாமுகமுறச்சென்றாலுமன்பர்தந்தேர்வருமே. (௩எஅ)

பரத்தையிற்பிரிவு.

காதலன்பிரிவுழிக்கண்டோர்புலவிக்
கேதுவிதாமவ்விறைவிக்கென்றல்.

வெண்டாமரைமனையார்புகழ்ந்தேத்தரன்வெங்கைவயற்
றண்டாமரையையிசைபாடியாடித்தடவும்வரி
வண்டாமெனமடவார்பலர்சூழ்ந்தனர்மன்னவனைக்
கண்டாலனமனையாளுடற்கீங்கிதுகாரணமே. (௩எகூ)

ஈங்கிதுவென்னெனப்பாங்கிவினுதல்.

திரியாவருநிலையார்வெங்கைவாணர்செழுஞ்சிலமபிற்
கரியானுமார்பிற்றிருமாதுமென்னக்கணவனுரம்
பிரியாதமையுமிக்காலத்திலேமன்பிரிந்தவாபோற்
றரியாதழுங்கினேமாதேயுனக்கென்கொலசார்ந்ததுவே. (ரூஅ0)

இறைமகன்புறத்தொழுகிறைமகளுணர்த்தல்.

செய்ச்சேதகத்திற்குளிர்நடந்தாங்குச்செறிந்தவடு
மெய்ச்சேயிழைக்கொடியன்னார்கடைத்தலைமேயினதாற்
கைச்சேரிடபக்கொடியாளாவெங்கைக்கனகவெற்பின்
மைச்சேல்வீழிச்செந்திருவேநம்வாய்தன்மணிவையமே. ()

தலைவியைப்பாங்கிகழறல்.

பலமாதருள்வெள்வளையூடுயர்ந்தபழுதில்சலஞ்
சலமாமெனவுயர்மாதேதிருவெங்கைத்தாணுவெற்பி
னலமாமனையறஞ்செய்கடன்பூணுநயன்றிருந்து
குலமாதர்தங்கட்கியல்போதங்கேள்வர்குறைசொல்வதே. ()

தலைவி சேவ்வணியணிந்துசேடியைவிடுப்புழி யவ்வணியுழையர்கண்டழுங்கிக்கூறல்.

நறுவாய்முருகுமிழ்வெண்டாமரையினகைமதிய
மறுவாயளிமுரல்செய்வெங்கைவாணர்வரைமடவீர்
வெறுவாய்மெல்வார்கட்கவல்கிடைத்தாங்குமுன்வீணிலிக
ழுறுவார்தமக்கிவ்வரத்தமெங்கேவந்துதவியதே. (ரூஅரு)

பரத்தையர்கண்டுபழித்தல்.

பரைகவர்பங்கர்மதிவார்சடையர்பணியணியர்
தரைகவர்வண்புகழ்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பில்
விரைகவர்வண்டுதொடர்வெட்சிசூடுமிம்மெல்லியலார்
நிரைகவர்கின்றவரோவறியேமிவர்நெஞ்சகமே. (ரூஅச)

பரத்தையை நுலகியனேக்கிவிடுத்தலிற்றலைமகன் வரவுகண்டுவந்துவாயில்கண்மொழிதல்.

நாவலரென்றும்புகழ்வெங்கைவாணர்நன்னுடனையா
ளேவலர்தம்மையெதிர்கண்டபோதிலிரவியெதிர்
பூவலாகின்றதெனவேமகிழ்ந்துபுவிபுரக்குங்
காவலர்வந்தனர்தாமேயுலகியல்காப்பதற்கே. (ரூஅரு)

வரவுணர்பாங்கிதலைவிக்குணர்த்தல்.

மின்னுகியசெஞ்சடையார்திருவெங்கைவெற்பிலுனை
யுன்னுதகன்றவர்வந்தாரவர்செயலுன்னலைநீ
யின்னுசெய்தாரையொறுத்திடினன்மையியற்றுகெனச்
சொன்னார்புலவரறிந்திலையோபொற்சுடர்த்தொடியே. (ரூஅசு)

தலைவனைத்தலைவியெதிர்கொண்டுபணிதல்.

அரவிடுங்கங்கணக்கையாளர்கொன்றையுமாததியுமே
விரவிடுஞ்செஞ்சடைவேதியனார்திருவெங்கைவெற்பிற்
பரவிடுமெங்கள்விழியாரக்கண்டுன்பதம்பணிய
வரவிடுமெங்கையர்பல்லாண்டிருந்துயிர்வாழியவே. (ரூஅஎ)

புணர்ச்சியின்மகிழ்தல்.

நாவுண்கடலமுதொப்பாகுவதன்றுநல்லளிகள்
பூவுண்பொழில்புடைசூழ்வெங்கைவாணரைப்போற்றலுறும்
பாவுண்செவிச்சுவையேயெனலாமலர்ப்பாயலினி
லேவுண்கருங்கண்மடப்பாவைநலகியவின்பினையே. (ரூஅஅ)

வெள்ளணியணிந்துவிடுத்துழித்தலைமகன் வாயில்வேண்டல்.

மலைமகள்பங்கர்திருவெங்கைவாணர்மணிவரைமே
லலைமகளென்னவருமடவார்வெள்ளணியணிந்து
நலைமகளென்னவடைந்தனராலினிக்கானவர்தந்
தலைமகண்மெய்ந்நலங்காண்பானெனையார்தருபவரே. (கஅகூ)

தலைவிநேயியாடியதிதுளைசாற்றல்.

மையாடியதடங்கண்ணாளொருநன்மகவுயிர்த்து
மெய்யாடியதிருவெண்ணீறழகர்தம்வெங்கையிலே
செய்யாடியநல்வலம்புரியீன்றசெழுமணிபோ
னெய்யாடினணல்வினைப்பயன்மேவுநெடுந்தகையே. (௩௬0)

தலைவன்றன்மனத்துவகைகூர்தல்.

பத்திரதன்மகனின்றேத்தும்வெங்கைப்பழமலையார்க்
கத்திரமன்னவிழியுமையாளயிலவேலவனைப்
புததிரனென்னுமபொருள்படவீன்றிலள்பொன்னுரைத்த
சிததிரமன்னவள்புத்திரற்பூத்துச்சிறந்தனளே. (௩௬௧)

தலைவிக்கவன்வரல்பாங்கியுணர்த்தல்.

ஆடுந்தொழிலர்திருவெங்கைவாணரணிவரைமேற்
பாடுஞ்சுரும்புபடர்ந்தலர்பூத்தபசுங்கொடியை
நேடும்பணியெனநன்மகவீன்றநினைவிரும்பிக்
கூடும்படிவந்தனர்பிரிந்தேகியகொற்றவரே. (௩௬௨)

தலைவியுணர்ந்துதலைவனொடுபுலத்தல்.

பண்காணுறுமென்மொழிப்பங்கர்வெங்கைப்பனிவரையாய்
கண்காதளவுமக்காதேந்திளமுலைகாறுமுள
பெண்காணெனமுன்புரைத்ததுநீபெறும்பிள்ளைசுவைத்
துண்காலமென்முலைநுண்ணிடைகாறுமுளையென்றதே. ()

தலைவிபாணனைமறுத்தல்.

பைத்தலைநாகமணிவோன்றென்வெங்கைப்பனிவரைமேற்
செய்த்தலையூரனுனையீங்குவிட்டதுதேரினொரு
மெய்த்தலைநீட்டிநுழைவான்கருதிமுன்வெங்கரவன்
பொய்த்தலைகாட்டியதன்றோபண்பாடும்புலைமகனே. (௩௬௩)

---

(௩௬௧) பத்திரதன் - தசரதன்.

வாயின்மறுக்கப்பட்டபாணன்கூறல்.

வெலவீரவாள்விழிமங்கைபங்காளாதம்வெங்கைவெற்பி
னலவீகமழ்புயத்துங்காதலர்பெயர்நானுரைப்பிற்
செலவீயுலகரெனைவியந்தேகட்செவியுமிழ்செங
கலவீசுவரின்றுநீவீசினைகருங்கல்லினையே. (கூகூரி)

விருந்தோடுவந்துழிப்பொறுத்தல்கண்டிறையோன்மகிழ்தல்.

திருந்துமரவப்பணியாளாவெங்கைச்செழுஞ்சிலம்பி
லருந்துமமுதமருந்தாய்ப்பிணிகளைந்தாங்குமுத்து
முருந்துமனையநகையாளிதயமுனிவகற்றும்
விருந்தும்வருகதிலலென்றுமெப்போதுமெம்வீட்டினுக்கே. ()

விருந்துகண்டொளித்தவூடல்வெளிப்படநோக்கிச் சீறேலென்றவள்சீறடிதொழுதல்.

அறத்தாறறியுந்திருவெங்கைவாணரணிவரைமேல்
வெறுத்தாலுனைமுனிவாற்றுநர்தாஞ்சிலர்வேறுளரோ
வொறுத்தாபெறுமின்பமுநினையாமலொருவாபிழை
பொறுத்தார்புகழுமறிந்திலையேமலாப்பூங்கொடியே. (கூகூ)

இஃதேங்கையர்காணினன்றன்றென்றல்.

மையென்றகண்டர்தம்வெங்கையிலேவண்டுவாரிசமென்
கையென்றலம்வருநல்வயலூரகண்ணுற்றனரேற்
பொய்யென்றறிகிலரெங்கையர்நீசெயும்பொய்ம்மையினை
மெய்யென்றுளங்கொண்டொழியாரெழுந்ததம்வெஞ்சினமே.

நின்னலதியாரையுநினையேனென்றல்.

மின்னையலாமலுவமையில்வேணிநம்வெங்கைபுரி
மன்னையலாமலடியார்பிறரைமதிப்பரெனி
னின்னையலாமனினைவேன்பிறரையென்னெஞ்சகத்திற்
பொன்னையலாமலெதிரிலையாகியபூங்கொடியே. (கூகூ)

காமக்கிழத்தியைக்கண்டமைபகர்தல்.

மறிந்தேதெருவிற்சிறுதேருருட்டுறுமைந்தனைப்போய்ச்
செறிந்தேதழுவக்கண்டுன்மகன்காணெனச்செப்பவெள்கிப்
பிறிந்தேகினளொருபெண்சோதிவெங்கைப்பெருந்தகையா
யறிந்தேனவளையிங்குன்மாமகன்றனக்கன்னையென்றே. (சா00)

தாமக்தழலியைப்பாங்கிதணித்தல்.

ஏயேதிலனைவிடாதன்பர்தாம்வந்திறைஞ்சிடவு
நீயேதுமெண்ணலையென்கொல்பொன்னேவிழிநீர்ப்பரவை
தூயேறுவந்தவர்தென்வெங்கைநாயகர்தூதுவராய்ப்
போயேயிரந்துகொளத்தீர்ந்தனடன்புலவியையே. (சா0க)

தலைமகள்புலவி தணியாளாகத்தலைமகனூடல்.

விரும்பாமறவர்புரமூன்றெரித்தவர்வேணியினி
லரும்பாமதியொன்றணிந்தபிரான்வெங்கையன்னவயற்
கரும்பாமொழியென்மடமாதினுக்கெந்தக்காலமுமிவ்
விரும்பாமனமிலையாரேவறிதிங்கிருந்தவளே. (சா0உ)

பாங்கி யன்பிலைநோடியையெனத்தலைவனையிகழ்தல்.

தீம்பால்கமழுமணிவாய்ப்புதல்வற்குச்சிற்றெறும்பு
பூம்பாவையாகவருள்வோன்றென்வெங்கைப்பொருப்பிலிளங்
காம்பானதோளிமுன்வேம்புதந்தாலுங்கழைக்கரும்பாம்
வேம்பாமுனக்குக்கரும்பாயினுமின்றுவேலவனே. (சா0ங)

ஆயிழைமைந்தனுமாற்றமையுமே
வாயில்களாகவரவேதிர்கோடல்.

அறந்தாங்குமையவள்கொங்கைத்தழும்பழியாவுரத்தர்
பிறந்தாங்கறிகிலர்வெங்கைமன்னுதுப்பிலகுமொரு
சிறந்தாங்கரவிந்தவண்டோர்புன்முள்ளிநினைந்ததுபோன்
மறந்தாங்கிராமலெமைநீநினைந்ததெம்மாதவமே. (சா0ச)

மணந்தவன்போயபின்வந்தபாங்கியோ
டிணங்கியமைந்தனையினிதிற்புகழ்தல்.

பிறந்தவன்றேநன்மணிநேர்புதல்வன்பிறர்கடைததேர்
பறந்தடைந்தாங்குநம்வாய்தலிலேவரப்பண்ணினனு
லிறந்தவங்கம்புனையெமமான்றன்வெங்கையிலிம்மையினுஞ்
சிறந்தவின்பந்தரவலலவனேயெனததேறினமே. (சஅரு)

தலைவிதலைவனைப்புகழ்தல்.

பண்ணுற்றமென்மொழியாய்தமிழ்நூலிசைப்பாவலர்தா
மெண்ணுற்றநம்முயிர்க்காதலாபோல்பவரில்லையெனப் [ய்க்
பெண்ணுற்றபங்கர்தம்வெங்கையிலேதண் பெரும்பொழில்வா
கண்ணுற்றகாதலையின்றளவாகவுங்காட்டினரே. (சஅசு)

சிலைநுதற்பாங்கிதலைவியைப்புகழ்தல்.

கேளோர்பரத்தையிற்போகாதிருத்தலிற்கீர்த்திபெற்று
நாளோடிலங்குமருந்ததியோவொப்புநாகமணி
தோளோனொருதெய்வசூளாமணிவெங்கைத்தொன்னகரில்
வாளோவெனுங்கட்பிறைவாணுதலெங்கண்மாதினுக்கே. ()

ஓதற்பிரிவு.

ஓதற்குப்பிரிவுதலைமகன்றன்னு
லுணர்ந்ததோழிதலைமகட்குணர்த்தல்.

விண்ணுடையார்புகழ்நூபுரபாதர்வெல்வேனெடுங்கட் [கே
பெண்ணுடையார்மகிழ்தென்வெங்கைமாநகர்ப் பெண்ணணங்
கண்ணுடையார்கற்றவரேகல்லார்கண்முகத்திரண்டு
புண்ணுடையாரெனக்கூறிநங்காதலர்போயினரே. (சஅஅ)

தலைமகள் கார்ப்பவருங்கண்டுவருந்தல்.

சிலையோடுவந்தனவென்செய்குவேன்முகில்செங்கமலன்
றலையோடுகொண்டவாவெங்கையிலேசெந்தமிழ்முதலாங
கலையோதுவான்விழைந்துறறாகககலவிககடலதனு
ளிலையோவொன்றேனுமருளவேண்டுமென்னவிசைப்பதுவே.

பாங்கியாற்றுவித்தல்.

என்போடரவணியெம்மானறிருவெங்கையேந்திழையாய்
நின்போதகமன்னமன்னவாதாமின்றுநீகளிப்பத
துன்போடுகெல்விககடன்மேய்ந்துசெய்யுளஞ்சோனைபெய்து
தனபோல்வருவவொன்றேவந்ததாலிச்சலதரமே. (சஉ()

காவற்பிரிவு.

காவற்றப்பிரிவுதலைமகன்றன்னு
லுணர்ந்ததோழிதலைமகட்குணர்த்தல்.

கருமாமுகிலுறங்குஞ்சோலைவெங்கைககடவுண்முக்கட்
பெருமாடொழிலையாருநீபெறினுபெறுகவெனறே
யொருமாநிலந்தனினமமுயிரககாவலரோங்குபுகழ்த
திருமாறொழிலவைகுதுமெனறுபோயினாதேமொழியே. ()

தலைமகள் கூதிர்ப்பருவங்கண்டுவருந்தல்.

கணையிலைவேலெனுங்கண்மாதுபங்காகருப்பவிலலிற்
கிணையிலையென்னுந்திருவெங்கைநாட்டிலிறைவரின்றோ
ணையிலையென்செய்குவேன்முறையோவெனறரற்றுகினுந்
துணையிலையென்பதுகொண்டோவிவ்வாடைதுயர்செய்வதே.

தோழியாற்றுவித்தல்.

பனிபொருசெஞ்சுடரன்றோதிருவெங்கைப்பாவைநல்லாய்
முனிபொருவிநதமெனவேகணவர்தம்முன்புரத்திற்
கனிபொருமெல்லிதழ்நன்மாதர்கொங்கைகரந்திடப்பன்
னுனிபொருகாலம்வரககாதலர்நமைநோக்குவரே. (சகரு)

(சக2) - கருபப இல - கருபபக்கிருகம.

தூதிற்பிரிவு.

தூதிற்குப்பிரிவுதலைமகன்றன்னு லுணர்ந்ததோழிதலைமகட்குணர்த்தல்.

சடைநின்றகங்கையாவெங்கையிலேயொருசந்துசென்றார்
படைநின்றகணணிநங்காவலரின்றுபற்றுசொன்றுதான்
றொடைநின்றநேரிசைமுனகுறளுநதனிசசொல்லுமுற
விடைநின்றுகூட்டுதலபோலிருவேந்தையிசைப்பதற்கே. ()

தலைமகள் முன்பனிப்பருவங்கண்டுவருந்தல்.

கருங்காளகண்டர்திருவெங்கைவாணாகனகவெற்பிற்
பொருங்காவலாதமபகைதணிப்பான்முனமபோயினவர்
பெருங்காலமுன்பனிநாள்வந்தும்வந்திலர்பேதையாமேல்
வருங்காமவெஞ்சரந்தன்னையுமாற்றமனமதிததே. (சகரு)

தோழியாற்றுவித்தல்.

போதாகிவந்தபிறைவேணியர்வெங்கைப்பொன்னகரிற்
காதாகிவந்தநல்வள்ளையிற்றூங்குகனங்குழைசேர்
மாதாகிவந்தசெநதேனேயவர்தம்வரவுசொலத்
தூதாகிவந்ததுமுன்பனிநாண்மன்னர்தூதுவர்க்கே. (சகசு)

துணைவயிற்பிரிவு.

துணைவயிற்பிரிவுதலைமகன்றன்னு லுணர்ந்ததோழிதலைமகட்குணர்த்தல்.

கடுக்கையணிந்தமுடியோன்றிருவெங்கைக்காரிகையா
யுடுகைகையிழந்தவன்கையோர்பொருளையொழித்ததனைத்
தடுக்கைவிரைந்ததுபோனட்டவேந்தன்றனக்குதவி
யடுக்கைவிழைந்துநினைவிடுத்தார்நட்பறிந்தவரே. (சகஎ)

தலைமகள் பின்பனிப்பருவங்கண்டுவருந்தல்.

நன்பனிவெண்மதியொன்றுடையோன்வெங்கைநாட்டொருத
மன்பனிருந்துயர்தீர்துணையாகவடலரிபோன்
முனபனிகளுசெலசசென்றவாகாணகிலர்மூடியெங்கும்
பினபனிபெய்துபெருந்துயர்வேலைபெருகுவதே. (சகஅ)

தோழியாற்றுவித்தல்

நின்பாலுதவிநினைந்துவந்தாகைந்நிமிர்ததலரும்
பின்பாயபனிவருநாளயிலவேறகட்பிறைநுதலாய்
தனபாதமென்றலைகக்கீவோனறிருவெங்கைதனனிலொரு
மனபாலுதவிநினைந்துமுன்போயினமன்னவரே. (சகக)

பொருள்வயிற்பிரிவு.

பொருள்வயிற்பிரிவுதலைமகன்றன்னு லுணர்ந்ததோழிதலைமகடகுணாத்தல.

திரைப்பாலெழுநஞ்சமுண்டோன்றிருவெங்கைததெண்கயததி
விரைப்பானலங்கண்விளங்கிழையாய்மகமேருவெனனும [ன்
வரைப்பானிதியந்தரற்கேகினாகடன்மாநிலததி
லிரப்பாமிடிகள்புகுமிடநதேடவிறையவரே. (சஉ0)

தலைவி யிளவேனிற்பருவங்கண்டுவருந்தல்.

போதந்திறைப்பவழறென்றலபற்றுதல்போலவிளஞ்
சூதநதழைககுமிந்நாள்கண்டிலார்கொறுணிவொடுநால்
வேதந்துதிககுநதனிமூலகாரணர்வெங்கைவெறபிற்
பாதஞ்சிவககப்பொருள்வயிற்போயினபாதகரே. (சஉக)

தோழியாற்றுவித்தல்.

நாகூரரவணிவெங்கைபுரேசர்நன்னாட்டிலொரு
பாகூமணிநெடுந்தேரன்பர்கேட்டுநின்பாலடைந்தா
ராகூழ்பெறுவலிவெஞ்சினவேள்வந்தமர்புரியக
கூகூவெனவினமாவேறியேகுயில்கூவுவதே. (சஉஉ)

தலைமகன்றலைமகளது வுருவெளிப்பாடுகண்டுள்ளோவியத்தல்.

கூர்க்குங்கனன்மழுவார்வெங்கைவாணர்குளிர்சிலம்பிற்
சீரகுங்கயலுங்கருமேகமுந்தொண்டைதீங்கனியும்
வாரகுங்குமமுலையுங்கொண்டுமாதெதிர்வந்துநின்றாள்
பார்க்குந்திசைதொறுமெங்கேயிம்மாயைபயின்றதுவே.(சஉங)

பாசறைமுற்றிமீண்டுர்வயின்வந்த தலைவன்பாகற்குப்பரிவோடுமொழிதல்.

கார்கண்டகண்டர்திருவெங்கைவாணர்கனகவெற்பிற்
போர்கண்டமன்னவாநல்வலவாநமபுரவிநெடுந்
தேர்கண்டபோதிலிரிந்தாரினிமணிதேரெதிர்செந்
நீர்கண்டமீனெனவுண்மகிழ்ந்தேவருநேரிழையே. (சஉச)

தலைமகளோடுகலந்துறுந்தலைமகன் கார்ப்பருவங்கண்டுகளித்தியம்பல்.

கயலேயனையவிழியாளும்யானுங்கலந்துபுணர்
செயலேமருவியிருக்கின்றனமலர்த்தேனொழுகி
வயலேவிளையுந்திருவெங்கைவாணர்வரையில்வரும்
புயலேயினிமதியொன்றின்முக்காலும்பொழிபொழியே(சஉரு)

கற்பியலமுற்றிற்று.

திருவெங்கைக்கோவைமுற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாசசுவாமிகள்திருவடிவாழ்க.

பரிசோதனபத்திரம்.

பாட்டு	வரி.	பிழை.	திருத்தம்.
அக	க	கலை	கலைக
கூஉ	க	குமை	குழை
கூச	,,	வுட	வுடை
கஅஙு	ச	கலைகா	கலையா
ககஎ	,,	தலைனை	தலைவனை
கஙரு	ச	நிற்கத்	நிற்க
ககூச	உ	னலைந	னலைநீ
உஎசூ	ச	பாடுங்	பாடுஞ்
உஅக	ச	விறை	லிறை
உஅஎ	,,	ளுவகை	ளுவகை
உகூஅ	ச	டுறுமே	டலென்னே
ஙஅஙு	,,	புணச்சி	புணர்ச்சி
ஙகச	க	சுண	சுண்
ஙஎங	க	மிண்	முண்

(சகூ)வதுசெய்யுள்ளு-வதுவரிஒட்டுப்பட்டானையெனவும்பா

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் தமிழ் நிலையம்